Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
ரா ம் கோ
(சி-884)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 வைகாசி 31 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.ஆகிர் 12 (14.06.2003) சனிக்கிழமை இதழ்: 253

# போர் நிறுத்த மீறல்களை கவனிப்பது

# கண்காணிப்புக்குழுவின் பொறுப்பே!

## போராளிகள் கைதுக்கு புலிகள் ஆட்சேபம்: தமிழ்ச்செல்வன் ரெலவ்சனிடம் தெரிவிப்பு!

(கிளிநொச்சி)

**போர்நிறுத்த விதிகள் மற்றும் அதனை மீறும் சம்பவங்கள் தொடர்பாக, கண்காணிப்புக் குழுவே விவகாரங்களைக் கையாளவேண்டும். போராளிகள் படையினரால் கைதாவது ஆட்சேபத்துக்குரியது.**


**படையினர் - விடுதலைப் புலிகள் ஆகிய இருதரப்பினரும், போர்நிறுத்த மீறலில் ஈடுபடும் எதிர்த்தரப்பினரைக் கைதுசெய்து தடுத்துவைக்கும் நடைமுறையைத் தவிர்த்து - இதுபோன்ற விடயத்தைக் கையாளும் பொறுப்பைக் கண்காணிப்புக்குழுவே ஏற்கவேண்டும் என- தமிழீழ விடுதலைப் புலிகள், கண்காணிப்புக் குழுவுக்குத் தெளிவுபடுத்தியுள்ளனர்.**

கிளிநொச்சியில் நேற்றுப் பகல் நடந்த விடுதலைப் புலிகளுக்கும், கண்காணிப்புக் குழுவுக்குமிடையிலான கலந்துரையாடலிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் தரப்பில் - அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனும், கண்காணிப்புக் குழு சார்பில் அதன் தலைவர் ரெலவ்சன் தலைமையிலான குழுவினரும் இச்சந்திப்பில் பங்கேற்றனர்.

இரு மணிநேரம் நீடித்த இச்சந்திப்புப் பற்றி - விடுதலைப் புலிகள் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)



ரெலவ்சனை தமிழ்ச்செல்வன் வரவேற்கின்றார்



பேச்சில் கலந்துகொண்ட கண்காணிப்புக்குழுவினர்

## துணைப்படையினர் நிரந்தர சேவையில்!

### போர் ஓய்ந்ததால் நடவடிக்கையாம்

(கொழும்பு)

தற்போது சேவையில் இருக்கும் ஊர்காவற்படையினரையும், றிசேவ் பொலிஸ் படையினரையும் நிரந்தர பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்வதற்கு அரசு ஆலோசித்து வருகிறது.

இவ்விடயம் குறித்து, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்க, அமைச்சரவையின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளார்.

தற்போது- சமாதானச்சூழல் நிலவிவருவதால், ஊர்காவற்படையின் சேவை தேவையற்றதாக உள்ளது என்றும், எனவே இப்படையில் உள்ள அனைவரையும் பொலிஸ் படையில் இணைத்துக் கொள்ள முடியும் என்றும், அமைச்சர் ஜோன் அமரதுங்க மேலும் தெரிவித்துள்ளார்.

இவ்விடயத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கிய பின்னரே ஏனைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரியவருகிறது.

### விண்ணாணம் விநாசியர்



அப்ப, சட்டவிரோதம் எல்லாம் சட்டத்துக்குள்ள வரலாம் எண்டுங்கோ..!

## மருத்துவர் போராட்டம் முடிவுக்கு வந்தது!

அரசாங்க வைத்தியர்களின் வேலை நிறுத்தப்போராட்டம் நேற்றுடன் முடிவடைகின்றது.

இதனால், இன்றுமுதல் யாழ். போதனா மருத்துவமனையில் மருத்துவ சேவைகள் அனைத்தும் வழமை போன்று நடைபெறவுள்ளன.

கடந்த பத்தாம் திகதியிலிருந்து நடத்தப்பட்டு வந்த வேலைநிறுத்தத்தில்- அரசாங்க வைத்திய அதிகாரிகளுக்கான சம்பள முரண்பாடுகளை தீர்த்தல், வட-கிழக்கு மாகாணங்களில் பணியாற்றும் வைத்தியர்களுக்கு இடர்காலக் கொடுப்பனவை வழங்குதல் ஆகிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

வைத்தியர்களின் இந்த வேலை நிறுத்தத்தினால் சிகிச்சைப் பிரிவுகள் அனைத்தும் முற்றாகவே செயலிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய வெளியுறவு அமைச்சருடன் ஜி.எல்.பீரிஸ் நீண்ட நேரம் பேச்சு!

(புதுடெல்கி)

அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், இந்திய வெளியுறவு அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

ரோக்கியோ மாநாட்டில் பங்குபற்றிவிட்டு, இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள அமைச்சர் பீரிஸ், இந்திய வெளியுறவு அமைச்சருடனும், வெளியுறவுச் செயலாளருடனும் பல்வேறு விடயங்கள் குறித்து நீண்ட நேரம் பேச்சு நடாத்தியுள்ளார்.

அத்துடன், இந்தியப் பிரதமரின் முதன்மைச் செயலாளரையும் அமைச்சர் சந்தித்து உரையாடியுள்ளார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தலைமையுடன் பேச ஜப்பான் அரசாங்கம் விருப்பம்!

### அந்நாட்டுத் தூதரக வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைமையுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு ஜப்பானிய அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது.

இதற்காக- இலங்கையில் உள்ள ஜப்பானியத் தூதரகம், கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் தலைமையகத்துக்குத் தகவல் ஒன்றை அனுப்பி வைத்திருப்பதாகத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி சந்திப்பை, அடுத்த வாரம் நடத்துவதற்கு ஜப்பானியத் தூதரகம் விரும்புவதாக அத்தகவலில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இச்சந்திப்புக் குறித்து இதுவரை விடுதலைப் புலிகளிடமிருந்து பதில் எதுவும் கிடைக்கவில்லையென்று கொழும்பில் உள்ள ஜப்பானியத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

(200,01)

## மேற்கு நாடுகளின் செல்வாக்கு இலங்கையை காலனியாக்கும்!

### பொதுஜன ஐக்கிய முன்னணி கருத்து

(கொழும்பு)

அமைதி முயற்சிகளில் மேற்கத்தைய நாடுகள் அதிகம் செல்வாக்குச் செலுத்துமானால் - அது நாளடைவில் இலங்கையை மேற்கின் ஒரு காலனி நாடாக ஆக்கிவிடும் என, பொதுஜன ஐக்கிய முன்னணி தெரிவித்துள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் சரத் அமுனுகம, கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசும்போது இவ்வாறு கூறினார்.

இதேவேளை - விடுதலைப் புலிகள் பேச்சுக்களில் தொடர்ந்து பங்கேற்காமல் விடுவது, நாட்டை யுத்தத்துக்குள் கொண்டுசென்றுவிடும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தை எச்சரித்ததாகவும் பொது

(10 ஆம் பக்கம் பார்க்க)

EXPO Aviation
எக்ஸ்போ
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999
071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290
(சி -975)

# முக்கிய அரசியல் முடிவுகள் ஓகஸ்ட்டுக்கு முன் இல்லை!

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் வரை- ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, முக்கிய அரசியல் முடிவெதனையும் எடுக்கமாட்டார் என்று, பொதுஜன ஐக்கிய முன்னணி வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வாரத் தொடக்கத்தில் தன்னைச் சந்தித்த பொ.ஐ.மு சிரேஷ்ட உறுப்பினர்களிடம் இந்த விடயத்தை ஜனாதிபதி சந்திரிகா நேரடியாகத் தெரிவித்ததாகக் கூறப்படுகின்றது.

அரசியல் நெருக்கடி நிலை குறித்து இவர்களுடன் விரிவாக ஆராய்ந்த ஜனாதிபதி சந்திரிகா, ஓகஸ்ட் மாதம்வரை தீர்க்கமான அரசியல் முடிவு எதையும் எடுப்பதில் லையென்று அறிவித்தார்.

அத்துடன் - புலிகளுடன் அரசாங்கம் நடத்திவரும் பேச்சுக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும்வகையில் தான் எந்த நடவடிக்கையையும் எடுக்கமாட்டேன் என்றும் ஜனாதிபதி சந்திரிகா, கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களிடம் உறுதியளித்துள்ளார்.

இதேவேளை - சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டணி தொடர்பான பேச்சுக்களைத் துரிதப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

## வடக்கு-கிழக்கை பிரிக்கின்ற சந்திரிகாவின் நிலைப்பாட்டுக்கு அவுஸ்ரேலிய அமைப்பு பாராட்டு!

வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பிரிக்கப்போவதாக தம்மைச் சந்தித்த பிக்குகளுக்கு ஜனாதிபதி சந்திரிகா கூறியதற்கு அவுஸ்ரேலியாவைத் தளமாகக் கொண்ட 'இலங்கையில் அமைதிக்கான உலக அமைப்பு' என்ற இயக்கம் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு பாராட்டுத் தெரிவித்துள்ளது.

இது குறித்து இந்த அமைப்பு ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

ஐக்கிய தேசியக் கட்சிக்கு முரணான கொள்கையைக் கடைப்பிடித்தது பாராட்டுக்குரியது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புலிகளின் வலைக்குள் சிக்கிப்போயுள்ளார்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளை பிரிக்க வேண்டும். இந்த இரண்டு மாகாணங்களும் இணைந்திருந்த தான வரலாற்று ரீதியான எந்த ஆதாரமும் கிடையாது.

கிழக்கு மாகாணம் சிங்களவரின் ஆதிக்கத்திலேயே இருந்து வந்தது. ஒரு காலத்தில் கண்டி இராச்சியத்தின் எல்லை கிழக்கு மாகாணம் வரை பரவியிருந்தது. கிழக்கில் சிங்கள ஆட்சி இருந்ததற்கான தகுந்த ஆதாரங்கள் உள்ளன என்றும் இந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பெண்கள் உரிமைகள் நாடகப் போட்டி

மாதர் அபிவிருத்திச் சங்கங்களுக்கு இடையிலான பெண்கள் உரிமைகள் பற்றிய நாடகப் போட்டி இன்று காலை 10 மணியளவில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் கச்சாய், மீசாலை, சாவகச்சேரி, கைதடி, மட்டுவில்; இடைக்குறிச்சி போன்ற இடங்களிலுள்ள மகளிர் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

## பாலா நோர்வேக்கு!

(லண்டன்)

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் இரண்டுவாரகால விடுமுறையில் நோர்வேக்குச் சென்றிருப்பதாக லண்டன் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சுகவீனம் காரணமாக, லண்டனில் சிகிச்சை பெற்று வந்த அவர், ஓய்வுக்காக நோர்வேக்குச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொழிற்சாலைக் கழிவுகளால் கரவெட்டியில் துர்நாற்றம்

கரவெட்டி மத்தி, பிள்ளையார் கோவிலடிக்கு அருகில் கழிவுகள் கொட்டப்படுவதால், அப்பகுதியில் துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

இதுவரைகாலமும் கடலில் கொட்டப்பட்டு வந்த திக்கம் வடிசாலைக் கழிவுகள்- கடந்த சில மாதகாலமாக கரவெட்டி மத்தி பிள்ளையார் கோவிலுக்கு அருகிலுள்ள வெளியில் கொட்டப்பட்டு வருகின்றன. இதனால் இப்பகுதியில் அதிக துர்நாற்றம் வீசுவதுடன் சூழல் மாசடைந்தும் வருவதையிட்டு மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

## நாய் கடித்த நபர் ஒன்றரை மாதங்களின் பின்னர் மரணம்

நாய்க்கடிக்கு இலக்கான ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இருபாலையைச் சேர்ந்த கந்தசாமி சிறிதயாளன் (வயது 24) என்ற நபரே மரணமானவராவார்.

இவர் கடந்த ஒன்றரை மாதத்துக்கு முன்னர் வேலைக்குச் சென்று திரும்பியபோது, நாய்க்கடிக்கு உள்ளாகி வைத்தியசாலைக்குச் சென்று தடுப்பூசியை ஏற்றினார். எனினும், அவர் இரண்டாவது தடுப்பூசியை சரியான தவணையில் ஏற்றாததாலேயே ஏற்பு வலி ஏற்பட்டு உயிரிழந்தாகத் தெரியவருகிறது.

## பாடசாலை தொகைமதிப்பீட்டு கூட்டம்

மனிதவள அபிவிருத்தி, கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் பாடசாலை தொகைமதிப்பு சம்பந்தமாக- சங்கானை, சண்டிலிப்பாய் பாடசாலைகளுக்கான கூட்டம் நாளை மறுநாள் பி.ப 1 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியிலும்,

உடுவில், தெல்லிப்பளை பாடசாலைகளுக்கான கூட்டம் செவ்வாய்க்கிழமை பி.ப 1 மணிக்கு இராமநாதன் கல்லூரியிலும் நடைபெறுமென வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (101)

## அதிபர்களுக்கு பயிற்சி வகுப்பு

(கோப்பாய்)

கோப்பாய் கோட்ட அதிபர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள், எதிர்வரும் 18 ஆம் திகதி மாலை 3 மணிக்கும், யாழ். கோட்ட அதிபர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் 20 ஆம் திகதியும் நடைபெறுமென கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி தெரிவித்துள்ளார்.

# நயினாதீவில் புதிய புத்தர்சிலை; அமைப்பதற்கு ஜெயலத் ஏற்பாடு!

## பொது மக்கள் கடும் விசனம்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவில் புதிதாக புத்தர் சிலை ஒன்றினை அமைப்பதற்கு புனர்வாழ்வு அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன அடிக்கல் நாட்டவுள்ளார்.

நயினாதீவில் பௌத்த விகாரைக்கு வெளியில், பிறிதொரு பகுதியில் புதிதாக புத்தர் சிலை ஒன்றினை அமைப்பதற்கு புனர்வாழவு அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

இம்மாதம் 27 ஆம் திகதி காலை 11 மணியளவில் இப் புதிய புத்தர் சிலைக்குரிய அடிக்கல்லினை புனர்வாழ்வு அமைச்சர் ஜயலத் நாட்டிவைப்பார் எனத் தெரியவருகிறது.

இதேவேளை- நயினாதீவு பௌத்த விகாரைக்கு வெளியில் புத்தர்சிலை அமைப்பதற்கு நயினாதீவு பௌத்த விகாரையின் பிரதம குரு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார் எனினும்- இந்த எதிர்ப்பையும் மீறி, அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன புதிய புத்தர் சிலையை அமைப்பதற்குத் திட்டமிட்டுள்ளார்.

அத்துடன்- நயினாதீவு பகுதியில் உள்ள மக்கள், அங்கு புதிய புத்தர் சிலை அமைப்பதை கடுமையாக எதிர்த்துள்ளனர். புதிய புத்தர் சிலை அமைக்கும் இம் முயற்சியானது நயினாதீவு முழுவதையும் பௌத்த சிங்களப் பிரதேசமாக மாற்றுவதற்கு எடுக்கப்படும் முயற்சி எனவும் இவர்கள் தெரிவித்துள்ளனர். (லி)

## சமுர்த்தி வங்கி உத்தியோகத்தருக்கு வங்கியியல் பயிற்சி

சமுர்த்தி வங்கிகளில் கடமையாற்றவெனத் தெரிவு செய்யப்பட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான வங்கியியல் தொடர்பான பயிற்சி நெறி, அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இப் பயிற்சிநெறியினை நடத்துவதற்கு, சமுர்த்தி வங்கி நடவடிக்கைக்குப் பொறுப்பான சமுர்த்தி உயரதிகாரிகள் யாழ்ப்பாணம் வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (24)

## சுதுமலை அம்மன் தீர்த்தத் திருவிழா

அருள்மிகு சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் நடைபெற்று வரும் மஹோற்சவத்தில், இன்று காலை 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழா நடைபெறவுள்ளது. (91)

## மண்டூரில் மின்சாரம் தாக்கி றிசேவ் பொலிஸ்காரர் பலி!

மண்டூரில் றிசேவ் பொலிஸ்காரர் ஒருவர் மின்சாரம் தாக்கி இறந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் இந்தச் சம்பவம், மண்டூர் பொலிஸ் நிலையத்துக்கு அண்மையில் உள்ள விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இறந்தவர் 28 வயதுடைய பதுளையைச் சேர்ந்த சம்சுதீன் என அடையாளம் காணப்பட்டார். மைதானத்தில் அறுந்துகிடந்த மின்சாரக் கம்பியினைத் தவறுதலாகத் தொட்டதினாலேயே இந்த விபத்து ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

## நாற்பது வருடங்களாக திருத்தப்படாதுள்ள வீதி!

### முறையிட்டும் பயன் இல்லை

யாழ்.பருத்தித்துறை வீதியையும், சட்டநாதர் வீதியூடாக கோவில் வீதியையும் இணைக்கும் கொண்டலடி வீதி, சுமார் 40 வருடங்களாகத் திருத்தப்படாதுள்ளது.

வீதி அமைத்த காலப்பகுதியில் இருந்து இதுவரை இந்த வீதி திருத்தம் செய்யப்படவில்லை. இதனால் இவ்வீதியூடாகப் பயணம் செய்யும் பொதுமக்கள் பெரிதும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனா.

கொண்டலடி வீதியைத் திருத்துமாறு மாநகரசபை மற்றும் அரசியற் பிரமுகர்கள் பலரிடம் வேண்டுகோள் விடுத்தும், இதுவரை எந்தப் பலனும் கிடைக்கவில்லை என்று - கொண்டலடி ஞானவைரவர் சனசமூக நிலையத்தினர் தெரிவித்தனர்.


### சிறு விளம்பரம்

**வேலையாள் தேவை**

இல.226, யாழ். கே.கே.எஸ். வீதியிலுள்ள ரஹ்மான் ஹோட்டலுக்கு உடனடியாக வேலையாட்கள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். நேரில் வரவும்.(376)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

SPOKEN ENGLISH WITH GRAMMAR
N.VIGNESWARAN ARCHERY
BLACK ROAD, CHANKANAI.
426 (302), K.K.S. ROAD,
JAFFNA.
(சி-1059)

**ராஜா** யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு நாளைமுதல்
சரத்குமார், மீனா, ரம்யா கிருஷ்ணன் நடித்த
**பாறை**
இயக்கம் கே.எஸ். ரவிக்குமார்.
(சி-973)

## தொழிலாளர்கள் தேவை

1) கட்டட மேற்பார்வையாளர்.
2) பாதுகாப்பு உத்தியோகத்தர்.
3) பார ஊர்தி சாரதிகள்.
4) மேசன்.
5) தச்சுத் தொழிலாளர்.
6) கூலித் தொழிலாளர்.

தகுதியானவர்கள் சுயவிவரங்களுடன் பத்து நாட்களுக்குள் அலுவலகத்திற்கு சமூகம் தரவும். தகுந்த வேதனம் வழங்கப்படும்.

மனிதவள முகாமையாளர்,
யூரோவில்,
866, பருத்தித்துறை வீதி, நல்லூர். (380)

## கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் (கச்சேரி) ஆங்கில சுருக்கெழுத்தாளர் பதவிக்கான வெற்றிடம்

சுருக்கெழுத்தாளர் சேவைக்குறிப்பின்படி, ஆங்கில சுருக்கெழுத்தாளருக்குரிய தகைமைகளை உடையவர்கள் வேறு இடத்திலிருந்து இங்கு இடமாற்றம் பெற்றோ அல்லது மீளச் சேவையிலோ கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் கடமையாற்ற விரும்புபவர்களும், எதுவித வேலையிலும் இல்லாத ஆங்கில சுருக்கெழுத்தாளருக்குரிய தகைமையையும், கணினி அறிவுமுடையவர்களும் விண்ணப்பிப்பதுடன், 25.06.2003 இக்கிடையில் நேரில் அலுவலக நாளில் சுய விபரத்துடன் சமுகமளிக்கவும். அடிப்படைத் தகுதி இல்லாதவர்கள் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

தி.இராசநாயகம்.
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.
(சி-1086)

## சேவை நலன் பாராட்டுகிறோம்



### திரு.ச.துரைவீரசிங்கம்

உடுவில் கல்விக் கோட்டத்தில், சித்திரபாட ஆசிரிய ஆலோசகராகக் கடமைபுரிந்து, பல அரிய சேவைகளைச் செய்து, இன்று (14-06-2003) தனது 60 ஆவது வயதில் ஓய்வுபெறும் திரு.ச.துரைவீரசிங்கம் அவர்களை சீரும்சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழவேண்டுமென வாழ்த்துகிறோம்.

*வாழ்த்துவோர்-*
கோட்டக் கல்விப்பணிப்பாளர்,
உடுவில் கல்விக்கோட்டம்,
அதிபர்கள், ஆசிரியர்கள்.

கோட்டக் கல்வி அலுவலகம்,
உடுவில்.
(சி-1087)

# பிஸ்ரல் குழு உறுப்பினர்களைப் பிடிக்க விசேட பொலிஸ் குழுவொன்று அமைப்பு!

## உயர்பொலிஸ் அதிகாரி கூறுகின்றார்

(கொழும்பு)

புலிகளின் பிஸ்ரல் குழு உறுப்பினர்களைக் கைது செய்வதற்கு, பொலிஸ்மா அதிபர் விசேட பொலிஸ் குழுவொன்றை அமைத்துள்ளார் என, உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் புலிகளின் பிஸ்ரல் குழுக்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவும், இக்குழுக்களைச் சேர்ந்தோரைக் கைது செய்யவும் விசேட பொலிஸ் குழுக்கள் கடமைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

பாதாள உலகக் குழுக்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட பொலிஸ் குழுவிற்கு கீழேயே புதிய பிரிவும் செயற்படவுள்ளது.

இந்த பொலிஸ் பிரிவுக்குச் சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டு, நேற்று முன்தினம் தொடக்கம் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

பாதாள உலகக்குழுக்களுடன் புலிகளின் பிஸ்ரல் குழுவினர் தொடர்புகளை வைத்திருப்பதாகத் தகவல்கள் கிடைத்ததையடுத்தே - பிஸ்ரல் குழுக்களைக் கண்டு பிடிப்பதற்கு, பாதாள உலகக்குழுக்களின் குற்றங்களைத் தடுக்க அமைக்கப்பட்ட பிரிவின் கீழ் புதிய அணியை இப்பணியில் ஈடுபடுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - பிஸ்ரல் குழுக்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த பொலிஸாருக்கு - இராணுவத்தினரின் உதவிகளைக் கோருவது பற்றியும் தீவிரமாகக் கலந்துரையாடப்பட்டு வருகிறது.

அத்துடன் - மீண்டும் குறிப்பிட்ட சில இடங்களில் வீதிச்சோதனைச் சாவடிகளை அமைக்கவும் பொலிஸ்மா அதிபர் நடவடிக்கை எடுத்திருப்பதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# இடைக்கால நிர்வாகம் தொடர்பாக புலிகளுடன் விரைவில் பேசுவோம்!

## ரோக்கியோவிலிருந்து திரும்பியதும் பீரிஸ்

(கொழும்பு)

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக, விடுதலைப் புலிகளுடன் நாம் பேசுவோம். மீண்டும் பேச்சுக்கள் ஆரம்பிக்கும் நம்பிக்கை எமக்கு இருக்கிறது என, அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

ரோக்கியோவிலிருந்து கொழும்பு திரும்பியதும் செய்தியாளர்களிடம் பேசும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

ஆனால் - இச்சந்திப்பில், விடுதலைப் புலிகள் கோரிநிற்கும் இடைக்கால நிர்வாகத்திற்கான தெளிவான வரைபை முன்வைப்பது பற்றி அவர் எதுவும் குறிப்பிடவில்லை.

# இத்தாலிக்குச் சட்டவிரோதமாக செல்ல முயன்ற தமிழ் இளைஞர்

## 20 பேர் கொழும்பில் வைத்து கைது

சட்டவிரோதமாக இத்தாலிக்குச் செல்லமுயன்ற 20 பேரை நீர்கொழும்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் - வென்னப்புவ, தொடுவாவ, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்த இளைஞர்களிடம் ஐம்பதாயிரம் ரூபா முற்பணமாகப் பெறப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - இந்த இளைஞர்களை இத்தாலிக்கு அனுப்ப ஏற்பாடு செய்தவர்களைக் கைதுசெய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.



காரைநகர் அம்பாள் முன்பள்ளியும், தங்கோடை முன்பள்ளியும் இணைந்து நடாத்திய சிறுவர் விளையாட்டுப் போட்டியில் - காரைநகர் உதவி அரச அதிபர் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (காரைநகர் நிருபர்)

# ரணிலின் ஜப்பான் கூட்டத்தில் முண்டியடித்த முதலீட்டாளர்கள்

## மண்டபத்தில் பெரும் இடநெருக்கடி

ஜப்பானிய முதலீட்டாளர்களுக்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நடத்திய கூட்டத்தில், அழைப்பு விடுக்கப்பட்டோரைவிட மிக அதிகமானோர் கலந்துகொண்டதால், மண்டபத்தில் பெரும் நெரிசல் ஏற்பட்டது.

இந்தக் கூட்டத்துக்கு 200 ஜப்பானிய முதலீட்டாளர்களுக்கே அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால், பெருமளவானோர் ஒன்றுகூடியதால், மண்டபத்தில் இடநெருக்கடி உருவாகி - பலர் வெளியில் நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

முதலீட்டுச்சபையின் தலைவர் அர்ஜுன மகேந்திரனோடு, சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பானிய வங்கியும் இணைந்து இந்தக் கூட்டத்துக்கான ஒழுங்குகளைச் செய்திருந்தது.

இந்தக் கூட்டத்தில் - இலங்கையின் முக்கிய முதலீட்டாளர்களுடன், அமைச்சர்கள் ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட, கே.என்.சொக்ஸி, ரவூப் ஹக்கீம், பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன், ஜப்பானிய விசேட தூதுவர் யசுசி அகாஷி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க-

ரோக்கியோ உதவி மாநாடு முடிந்து 48 மணி நேரத்துக்குள் இத்தகைய வரவேற்புக் கிடைத்தது மகிழ்ச்சியைத் தருகிறது.

ஜப்பானிய முதலீட்டாளர்களாகிய நீங்கள் - இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கும் உதவமுடியும். ஏற்கனவே - இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் சுதந்திர ஒப்பந்தங்களைச் செய்துளளோம்.

இதில் - ஜப்பானும் இணைந்து கொண்டால், இலங்கையை போட்டிக்கான சந்தையாக உருவாக்க ஒத்துழைப்பு வழங்குவோம். புவியியல் ரீதியாக இலங்கை, பிராந்திய வர்த்தக மையமாக உள்ளது.

இங்கு சுற்றுலாப் பயணிகளும் அதிகளவில் வருகின்றனர். மிகச்சிறந்த சுற்றுலாத் தலங்களும் உள்ளன. உயர்கல்வி அறிவு, எமது அபிவிருத்திக்குப் பெருந்துணையாக இருக்கின்றது.

ஜப்பானுடன் பலமுனைப் பொருளாதார ஒத்துழைப்பு நடவடிக்கைகளை விஸ்தரிக்கத் திட்டமிட்டுள்ளோம். அது குறித்து ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் யொறிகோ கவாகுச்சியுடன் பேச்சு நடத்தினேன்.

ஜப்பானிய நிறுவனங்கள் வெளிநாடுகளில் பொருளாதார வலயங்களை நிறுவும்போது, இலங்கையையும் கவனத்தில் எடுக்குமாறு விதந்துரைக்கின்றேன்.

பல உயர்தர நிறுவனங்களிடம் இருந்து உயர்ந்த போட்டி இருக்கும் போது எமது நாட்டின் பொருளாதாரத்தினையும் வளர்ச்சிபெறச் செய்ய முடியும்.

இதற்கு ஜப்பானிய முதலீட்டாளர்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

### சந்திரபாபு நாயுடு இலங்கைக்கு வருகிறார்

(கொழும்பு)

ஆந்திரமாநில முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு, மிகவிரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி குறித்த முக்கிய கலந்துரையாடல் ஒன்றில் கலந்துகொள்வதற்காகவே இவர் கொழும்பு வருகிறார்.

அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் அழைப்பின் பேரிலேயே, இவரின் இலங்கை விஜயம் இடம்பெறுகின்றது.

# கொழும்பு தெற்கில் புதிய துறைமுகம்: சாத்தியம் குறித்து ஆராய ஒப்பந்தம்!

(கொழும்பு)

கொழும்பு தெற்குப் பகுதியில்- பாரிய கப்பல்கள் தரித்துச்செல்லக் கூடிய துறைமுகம் ஒன்றைப் புதிதாக நிறுவுவது தொடர்பான சாத்திய வள அறிக்கையைத் தயாரிப்பதற்கான ஒப்பந்தம் ஒன்றில் பிரித்தானிய நிறுவனம் ஒன்றுடன் உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியும், இலங்கை துறைமுக அபிவிருத்தி அதிகாரசபையும் இணைந்து இந்த சாத்திய வள அறிக்கைக்கான செலவுகளைப் பொறுப்பேற்கவுள்ளன.

இந்தச் சாத்திய வள அறிக்கையைத் தயாரிப்பதற்கு ஒரு கோடி 40 லட்சம் டொலர் செலவாகும், என மதிப்பிடப்பட்டுள்ளது.

பிரித்தானிய நிறுவனத்துடனான இந்தச் சாத்திய வள அறிக்கை தயாரிப்பு உடன்படிக்கை, நேற்று துறைமுக அதிகாரசபையின் தலைமையகத்தில் கைச்சாத்திடப்பட்டது.

இந்த நிகழ்வில், அமைச்சர் ரவூப் ஹக்கீமும் கலந்துகொண்டார்.

கொழும்பு தெற்கில் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ள புதிய துறைமுகம், 12 கொள்கலன் இறங்குதுறைகளைக் கொண்டதாக அமையுமென்றும், இத்துறைமுகத்தை அமைக்க சுமார் 180 கோடி டொலர் தேவைப்படும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் துறைமுகத்தை அமைப்பதன் மூலம் - பாரிய வர்த்தகக் கப்பல்களை இலங்கைக்குக் கொண்டு வர முடியும் என்றும், துறைமுக அதிகாரசபை நம்பிக்கை தெரிவித்துள்ளது.

# களுத்துறையில் உயிரிழந்தவரின் தாயாருக்கு நஷ்டஈடு வழங்குக!

## அரசாங்கத்துக் ... த்தரவு

விடுதலைப் புலிக ... செய்யப் பட்டு, களுத்துறை ... போது உயிரிழந்த நபரின் ... அரசாங்கத்திற்கு ...

2000 ஆம் ஆ ... இடம்பெற்ற கை ...

இதையடுத்த ... வடிப்படை ...

# இரட்டைவேடத்தைக் கடைப்பிடித்தால் அரபாத்தின் நிலையே சந்திரிகாவுக்கு!

## ஹெல உறுமய அமைப்பாளர் சம்பிக்க எச்சரிக்கை

(கொழும்பு)

... திபதி சந்திரிகா குமார ... தொடர்ந்து இரட்டைவேடத் ... டைப்பிடிப்பாரேயானால், ... த்தில் அரபாத்துக்கு ஏற் ... லதான் அவருக்கும் ஏற்படும் ... ஹெல உறுமயவின் அமைப்பாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

நாரஹேன்பிட்டியில், செய்தியாளர் மாநாட்டில் பேசிய அவர் -

ஜனாதிபதி சந்திரிகா - உள்நாட்டில் ஒன்றும் சர்வதேசத்துக்கு ஒன்றுமாக இரட்டைவேடப் போக்கினைக் கடைப்பிடித்து வருகிறார்.

இந்த நிலையை அவர் தொடர்ந்து கடைப்பிடிப்பாரேயானால், பலஸ்தீனத்தில் அரபாத்தை ஓரங்கட்டி விட்டு, பிரதமர் அப்பாஸை அமெரிக்கா முதன்நிலைப்படுத்துவது போன்ற நிலைக்கு அவரைக் கொண்டுவந்துவிடும்.

சந்திரிகாவின் இரட்டை வேடத்தை வைத்துத்தான், சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி கூட்டணிக்கு ஆதரவு வழங்குவது தொடர்பான முடிவை எம்மால் எடுக்கமுடியாதுள்ளது.

சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி. கூட்டணிக்கு, கொள்கை அடிப்படையில்தான் எம்மால் ஆதரவு வழங்க முடியும்.

வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்புத் தொடர்பான எந்தத் திட்டமும், நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் மக்களுக்குத் தெரியப்படுத்தப்படவேண்டும்.

வெளிநாட்டு நிதியுதவியை, நாடாளுமன்றத்துக்குத் தெரியாமல் அரசாங்கம் பயன்படுத்தமுடியாது. மக்களுக்காக வழங்கப்பட்ட இந்த நிதியை, நாடாளுமன்றத்துக்குத் தெரியாமல் அரசாங்கம் புலிகளுக்குக் கொடுக்க முடியாது.

வடக்கு - கிழக்குக்கு ஒதுக்கப்படும் நிதியுதவிக்கான கடனை முழு இலங்கையருமே செலுத்தப் போகின்றனர். இதைப் புலிகள் செலுத்தப் போவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

### ... ழக விடுதலை ... ங்கத்துக்கு தடை

(சென்னை)

... விடுதலை இயக்கம் ... மைப்பைத் தடைசெய்வதாக ... அரசாங்கம் தெரிவித்துள் ...

... வரசன் என்பவரைத் ... கக் கொண்ட இந்த ... சட்டவிரோத நடவடிக்கை ... டுவதாகக் கூறியே தமி ... தடைசெய்துள்ளது.

### அம்பாறையில் அதிரடிப்படை அட்டகாசம்

# கோயிலுக்கு மரக்கறி வாங்குவதற்குச் சென்ற மக்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்!

அம்பாறை மாவட்டம், 15 ஆம் கிராமம், கண்ணகை அம்மன் ஆலயத்தின் அன்னதானத்துக்கு மரக்கறி வாங்கச்சென்ற பொதுமக்கள் மீது - விசேட அதிரடிப்படையினர் நடத்திய தாக்குதலில் 19 பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

அம்பாறை மாவட்டம், 15ஆம் கிராமம், கண்ணகை அம்மன் ஆலய உற்சவத்தில் அன்னதானம் வழங்குவதற்காக மரக்கறி வாங்க ஆலய நிர்வாக சபையினர் உள்ளிட்ட பொதுமக்கள் உழவு இயந்திரம் ஒன்றில் சென்றனர்.

இவர்களை, வெல்லாவெளி கம்பி இறக்கம் என்ற இடத்தில் வைத்து மண்டூர் முகாமைச் சேர்ந்த விசேட அதிரடிப்படையினர் நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் வழி மறித்தனர்.

உழவு இயந்திரத்தில் தமக்கு மண் ஏற்றித்தருமாறு இவர்களை விசேட அதிரடிப்படையினர் கேட்டனர்.

ஆனால், தாம் ஆலயத்தில் அன்னதானம் கொடுக்க மரக்கறி வாங்கச் செல்வதாகக் கூறி மறுக்கவே, உழவு இயந்திரத்தில் சென்ற பொதுமக்களை விசேட அதிரடிப் படையினர் கடுமையாகத் தாக்கினர்.

உழவு இயந்திரத்தில் இருந்த 19 பொதுமக்களும் தாக்குதலுக்குள்ளாகினர். இவர்களில் ஒன்பது பேர் மோசமாகப் பாதிக்கப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாகக் கல்முனையிலுள்ள மனித உரிமை ஆணைக்குழு அலுவலகம், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.சந்திரநேரு, அம்பாறை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பொறுப்பாளர், அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பாவா, காரைதீவு விசேட அதிரடிப்படை கட்டளை அதிகாரி ஆகியோரிடம் மேற்படி ஆலய நிர்வாகிகள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதையடுத்து, இச்சம்பவத்துக்குக் கண்டனம் தெரிவித்து, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு, அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.சந்திரநேரு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

தற்போதைய சமாதானச் சூழலில் விசேட அதிரடிப்படையினர் பொதுமக்களைத் தாக்கியிருப்பது மோசமான நடவடிக்கை என்றும், சம்பந்தப்பட்ட படையினர் மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## வித்துவான் வேலனுக்கு அஞ்சலிக்கூட்டம்

சிறந்த தமிழறிஞரும், பிரபலமான பேச்சாளரும், முன்னாள் மானிப்பாய் இந்துக்கல்லூரித் தமிழாசிரியருமான வித்துவான் க.ந.வேலன், அண்மையில் லண்டனில் காலமானார். இதையொட்டி, அஞ்சலிக்கூட்டமொன்றை அகில இலங்கை கம்பன் கழகம் நாளை மாலை 5.30 மணிக்கு ஏற்பாடு செய்துள்ளது. நல்லூர் கோயில் வீதியில் அமைந்துள்ள கம்பன் கோட்டத்தில் இந்தக்கூட்டம் நடைபெறும்.

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறைத்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில், இலங்கை உச்சநீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், யாழ்.பல்கலைக் கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர், யாழ். இந்துக் கல்லூரி முன்னாள் பிரதி அதிபர் க.சிவராமலிங்கம், திருமதி மனோன்மணி சண்முகதாஸ், இ.ஜெயராஜ், ஆறுதிருமுருகன், ஆகியோர் அஞ்சலியுரையாற்றவுள்ளனர்.

## மானிப்பாயில் ஆயர் தலைமையில் திருப்பலி

மானிப்பாய் புனித அந்தோனியார் திருத்தலத்தில், இன்று காலை 7.15 மணிக்கு யாழ்.மறை மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையில் திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இன்றுமாலை 5.30 மணிக்கு நற்கருணை வழிபாடும் இடம்பெறும்.

# 909 தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனக்கடிதங்கள் அனுப்பிவைப்பு

வட - கிழக்கு மாகாணத்தில், 909 தொண்டர் ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்கள் மாகாண கல்வியமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

வட - கிழக்கு மாகாணத்திலுள்ள ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களில் 909 பேருக்கு தரம் 3/2 சேவைக்கான நியமனக் க்டிதங்கள் உரியவர்களுக்கு நேரடியாகவே தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மாகாண கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

இவர்கள் அனைவரும் எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதவியை கடமையேற்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை - மிகுதி 91 ஆசிரியர்கள் பூரண விபரங்களை அளிக்காததால், அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் இதுவரை அனுப்பி வைக்கப்படவில்லை. மிக விரைவில் அவர்களுக்கும் நியமனக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்படும்.

புதிதாக நியமனம் பெற்ற தொண்டராசிரியர்கள், முதலில் கடமைபுரிந்த அதே பாடசாலைகளிலேயே தொடர்ந்தும் கடமைபுரிவார்கள்.

1998 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தொண்டர் ஆசிரியராகக் கடமைபுரிந்து, இரண்டாம் பட்டியலில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய தொண்டர் ஆசிரியர்களுக்கே இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாட்டாளிபுர இளைஞர் மீது கடற்படையினர் தாக்குதல்!

## கண்காணிப்புக் குழுவில் முறைப்பாடு

(திருகோணமலை)

திருகோணமலைக்குச் செல்வதற்காக, மூதூர் இறங்குதுறைக்குப் படகில் சென்றுகொண்டிருந்த இரு இளைஞர்களைக் கடற்படையினர் கடுமையாகத் தாக்கினர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

பாட்டாளிபுரத்தில் இருந்து புதனன்று காலை 9 மணிக்கு மூதூருக்குப் படகில் சென்றுகொண்டிருந்த வெ.கிரிதரன் (வயது 23), க.நாகேந்திரன் (வயது 21) ஆகியோரை, மூதூர் கலாசார மண்டப முகாமில் இருந்த கடற்படையினர், தடுத்து வைத்துப் பலமாகத் தாக்கினர்.

இவர்களைக் கடற்படையினர் மாலைவரை தடுத்துவைத்திருந்தே விடுவித்தனர். இச்சம்பவம் குறித்து தாக்கப்பட்ட இருவரும் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடற்படையினர் தாக்கியதால் ஏற்பட்ட இரத்தப் பெருக்குடனேயே சென்று இவர்கள் தமது முறைப்பாடுகளைச் செய்தனர்.

# மலசலகூட வசதிகளின்றி பாடசாலை மாணவர் அவதி

(அரியாலை)

அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலையில், மலசலகூட வசதிகள் இல்லாமையால் மாணவர்களும், ஆசிரியர்களும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளால் சொந்த இடத்திலிருந்து இடம்பெயர்ந்து அரியாலை கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயத்தில் இயங்கிவந்த மேற்படி பாடசாலை, கடந்த மாதத்திலிருந்து சொந்தக் கட்டடத்தில் இயங்கிவருகிறது.

மலசலகூடமும் ஏனைய சில கட்டடங்களும் படைநடவடிக்கைகளின்போது தகர்ந்து போனதாலேயே இந்தநிலை தோன்றியுள்ளது.

மேற்படி பாடசாலையில் - ஓலைக் கூடாரத்தினையே தற்காலிக மலசலகூடமாகப் பயன்படுத்துவதால் பல சங்கடங்களை ஆசிரியர்களும், மாணவர்களும் எதிர்நோக்க வேண்டியுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## ஆசிரிய கலாசார பரீட்சைகள்

பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலைகளில் பயிலும் பயிற்சி ஆசிரியர்களுக்கான பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

இதன்படி - முதலாம வருட ஆசிரியர்களுக்கு எதிர்வரும் 15 ஆம், 19 ஆம் திகதிகளிலும், 2 ஆம் வருட இறுதித் தேர்வு ஆசிரியர்களுக்கு 20 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரையும் அந்தந்த ஆசிரிய கலாசாலைகளில் நடைபெறவுள்ளன.

பரீட்சை வினாத்தாள்கள்- ஆணையாளரால், யாழ். கல்வி வலயத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# ஓய்வுபெற்றுச்செல்ல தன்னை அனுமதிக்குமாறு தேர்தல் ஆணையாளர் உயர்நீதிமன்றில் வழக்கு

(கொழும்பு)

அரசாங்கம், தன்னைத் தொடர்ந்து சேவையாற்ற நிர்ப்பந்திப்பதாகவும் - வேறு பொருத்தமான ஒருவரை உடனடியாகத் தேர்தல் ஆணையாளர் பதவியில் நியமித்து, தான் ஓய்வுபெற நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்துக்கு உத்தரவிடவேண்டுமெனக் கோரி, தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க - உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமைமீறல் வழக்கு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

2001 ஆம் ஆண்டில் புதிய தேர்தல் ஆணையாளர் ஒருவரை நியமித்து இப்பதவியில் இருந்து விலக அனுமதிக்குமாறு, ஜனாதிபதி சந்திரிகாவிடம் கேட்டபோதும் அவர் இதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை.

தேர்தல் ஆணைக்குழுவொன்றை அமைப்பதற்கான 17 ஆவது அரசியற் திருத்தம் கொண்டுவரப்பட்டது. இதனைச் செயற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

61 வயதாகிவிட்ட எனக்கு, ஐந்து முறை இதய நோய்த்தாக்கம் ஏற்பட்டது. அண்மையில் கூட ஒரு முறை இதயநோய்த் தாக்கத்திற்குள்ளாக நேரிட்டது.

இந்தநிலையிலும், பதவியை விட்டு விலக எனக்கு அனுமதி வழங்கப்படவில்லை. தேர்தல் திணைக்களத்துக்கு எதிரான வழக்குகளுக்காக அடிக்கடி நீதிமன்றங்களுக்கும் நானே செல்லவேண்டியுள்ளது.

இதனால், வேறொருவரை இப் பதவியில் நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு, உயர்நீதிமன்றம் - அரசாங்கத்துக்கு உத்தரவிடவேண்டும். அத்துடன் - நஷ்டஈடாக 10 மில்லியன் ரூபாவை அரசாங்கத்திடமிருந்து பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தேர்த[illegible] ஆணையாளர் தனது ம[illegible] குறிப்பிட்டுள்ளர்.

இந்த மனுவில் பிரத[illegible] ளாக, ஜனாதிபதி சந்திரி[illegible] ரதுங்க, பிரதமர் ரணில் [illegible] சிங்க, சட்டமா அதிபர் [illegible] குறிப்பிடப்பட்டுள்ளனர்.

## கல்வி அபிவிருத்தி கூட்டம்

யாழ். வலய பாடசாலை அதிபர்களுக்கான கல்வி அபிவிருத்தி தொடர்பான கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

இக் கூட்டம், எதிர்வரும் 18 ஆம் திகதி பி.ப. 3 மணிக்கு யாழ். வலய முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறும். இக்கூட்டத்தில் யாழ். வலய அனைத்து அதிபர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

# தமிழ்மொழித் தினப்போட்டி திகதிகளில் மாற்றங்கள்!

மாகாண மட்ட விளையாட்டுப்போட்டிகள் நாளை மறுநாள் முதல் ஜூலை 4 ஆம் திகதிவரை வவுனியா, திருகோணமலை ஆகிய இடங்களில் நடைபெறுவதால், தமிழ்மொழித்தினப் போட்டிகள் நடைபெறும் திகதிகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்டமட்டப் போட்டிகள் ஜூலை 6 ஆம் திகதிக்கு முன்னரும், மாவட்ட நிலை எழுத்தாக்கப் போட்டிகள் ஜூலை 7 ஆம் திகதியும், மாகாண நிலைப் போட்டிகள் ஜூலை 18 ஆம், 19 ஆம் திகதிகளிலும், மாகாண தமிழ்மொழித் தின விழா ஜூலை 19 ஆம் திகதியும் நடைபெறவுள்ளதாகவும் -

மாகாணநிலைப் போட்டிகளும், தமிழ்மொழித்தின விழாவும் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் எனவும் வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (101)

## தமிழ்த்தினப் போட்[illegible]

கோப்பாய் கோட்டமட்ட[illegible] தமிழ்த் தினப் போட்டி [illegible] 14 ஆம், 15 ஆம் தி[illegible] காலை 9 மணிக்கு [illegible] கிறிஸ்தவ கல்லூரியில் [illegible] வுள்ளது.

☆ ☆

ஊர்காவற்துறை கல்[illegible] டப் பாடசாலைகளுக்கு இ[illegible] தமிழ்த்தினப் போட்டிகள், [illegible] திங்கள், செவ்வாய் ஆகி[illegible] ளில் ஊர்காவற்றுறை[illegible] கோட்டத்தில் நடைபெ[illegible]


வாழ்க வளமுடன்



HAPPY BIRTHDAY

எட்டாவது அகவையில்

[illegible]ர்மிகா

[illegible]ணாவத்தை,

[illegible]ட்டி.

## வார்த்தை விளையாட்டு - 37

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 தொ | 2 | | | | 3 |
| | 4 | | ழ | | |
| | ரி | | | 5 | தா |
| 6 வி | | 7 | | | 8 |
| | | | | | |
| | 9 | தி | | | பி |

முழுப் பெயர் : ..............................

கற்கும் பாடசாலை : ..............................

கற்கும் தரம் : ..............................

முகவரி : ..............................

.............................. ..............................

கையொப்பம் திகதி

**இடமிருந்து வலம்**

1. தூரத்தில் இருப்போருடன் பேச உதவும்.
4. ஒரு வகைக் கிழங்கு.
5. வானவில்லில் உள்ள ஒரு நிறம்.
6. வர்த்தகம்.
9. கூடுதல்.

**மேலிருந்து கீழ்**

1. கழுத்து இப்படியும் அழைக்கப்படும்.
2. ஆபிரிக்க நாடு ஒன்று.
3. சாகிதம்.
6. வேகம்.
7. மகாகவி.
8. சிலை வடிப்பவன்.



சிறுவர் அரங்கம் வார்த்தை விளையாட்டுப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட எவரும் பங்குபற்றலாம்.

மேற்காணும் கூப்பனை நிரப்பி உங்கள் சுயவிபரங்களுடன் தபாலில்,



**நமது ஈழநாடு**
**சிறுவர் அரங்கம்**
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் பதில்கள் எமக்கு வந்து சேர வேண்டிய
இறுதி நாள்:- 18-06-2003
சரியான விடை எழுதிய மூவரை குலுக்கல் மூலம் தெரிவுசெய்து பரிசு வழங்கப்படும்.



## வார்த்தை விளையாட்டு - 36

இல் பங்குபற்றிச் சரியான விடை எழுதி, குலுக்கல் மூலம் பரிசு பெறத் தெரிவுசெய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகள்.

*1 ஆம் பரிசு* -
த.ஆரண்யா
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

*2 ஆம் பரிசு* -
ந.ஸ்ரீராம்
ஓடக்கரை,
பருத்தித்துறை.

*3 ஆம் பரிசு* -
பி.டெமினிக்காவே
6/1 புறாபு முன் ஒழுங்கை,
கச்சேரி கிழக்கு,
யாழ்ப்பாணம்.





★ பரிசுகள் தபால்மூலம் விரைவில் உங்களை வந்தடையும்.

## My School

Skandavarodaya college is my school. It is in Kandarodai. It is a big school. We have 25 class rooms. We have Principal's office, Library, Laboratory, Canteen, and two Staff rooms. There are 40 teachers and 1350 students. We have a Balamurugan temple in front of the School. There are ten coconut trees around the school. We have a well and a big play ground too. My school motto is 'truth fulness is the best virtue.' I love my school very much.

*S. Sakthithajini*
*Grade - 7, Skandavarodaya college.*

| நாடுகள் | | நாணயங்கள் |
|---|---|---|
| இலங்கை | - | ரூபா |
| இந்தியா | - | ரூபா |
| பாகிஸ்தான் | - | ரூபா |
| அமெரிக்கா | - | டொலர் |
| ஜப்பான் | - | யென் |
| பிரித்தானியா | - | ஸ்ரேலிங்பவுண் |
| ஜேர்மன் | - | மார்க் |
| பிரான்ஸ் | - | பிராங்க் |



கு.பிரணவன்,
தரம் 5, உடுப்பிட்டி, அ.மி. கல்லூரி.

## வார்த்தை விளையாட்டு - 36 இன் சரியான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. ரோக்கியோ.
2. யோகர்.
4. கரடி.
5. ஆண்டவன்.
6. காஎல்.
7. ஆரம்பம்.
8. காவல்.



**மேலிருந்து கீழ்**

1. ரோஜா.
2. கிண்டல்.
4. கவனம்.
5. ஆகாயம்.
7. ஆனி, ஆடி.








# சிறுவர் அரங்கம்

## முயலாரும் சிறுமியும்

ஒரு நாள் முயலார் வழக்கமாகத் தாம் செல்லும் காலை உலாவின்போது, திருவாளர் மனிதரின் வீட்டின் முன்னால் உள்ள காய்கறித் தோட்டத்தைக் கண்டார். அந்தத் தோட்டத்தில் கோவா, கரட், பீற்றூட் முதலான பலவகைக் காய்கறிச் செடிகள் செழித்து வளர்ந்திருந்தன. பார்க்கவே அவரின் வாய் ஊறியது.

அவர் தோட்டத்துக் கதவுகள் மூலம் உள்ளே பார்த்தார். நடைபாதையில் திருவாளர் மனிதரின் மகள் விளையாடிக் கொண்டிருந்தாள். அந்தச் சிறுமிக்கு ஐந்தோ, ஆறோ வயதிருக்கும். முயலார் ஒரு திட்டத்துடன் கதவருகில் சென்றார்.



"காலை வந்தனம் தங்கச்சி"

"காலை வந்தனம் முயலாரே, உமது சுகம் எப்படி?"

"மிகவும் மோசம் பிள்ளை. அதிருக்கட்டும் இந்தத் தோட்டத்தின் பின்னால் உள்ள வீடு யாருடையது."

"அது எங்களுடையது தான். அப்பா கட்டியது."

"மிகவும் மகிழ்ச்சி. சிறிது நேரத்துக்கு முன்புதான் உம்முடைய அப்பாவை வழியில் சந்தித்தேன். அவர் தம்முடைய வீட்டுத்தோட்டத்தில் தமது மகளான நீர் விளையாடிக் கொண்டிருப்பதாகச் சொன்னார். உம்மிடம் கேட்டால் இந்தக் கதவுகளை நீர் திறந்து விடுவீர் என்றும் சொன்னார்."

சிறுமி மறுபேச்சில்லாமல் கதவைத் திறந்துவிட்டாள். முயலார் இரண்டு பாய்ச்சலில் தேட்டத்தினுள் நுழைந்தார். தாம் விரும்பிய காய்கறிகளைப் பிடுங்கினார். சிறுமிக்கு நன்றி சொல்லிவிட்டு தம் வீடு திரும்பினார். அன்று அவர் வீட்டிலே நல்ல ருசியான மரக்கறிச் சாப்பாடு.

இதன் பிறகு அடிக்கடி திருவாளர் மனிதர் இல்லாத நேரம் பார்த்து முயலார் அங்கு வரத்தொடங்கினார். சிறுமியுடன் இனிமையாக உரையாடினார், அவளின் அப்பா சொன்னதாகக் கதவைத் திறப்பித்தார். வேண்டிய காய்கறிகளைப் பிடுங்கிச் சென்றார்.

சில நாட்கள் சென்றன. ஒரு நாள் திருவாளர் மனிதர் தமது தோட்டத்தைச் சுற்றிப்பார்த்தார் தமது காய்கறிச் செடிகள் பிடுங்கப்பட்டும், நிலம் உழக்கப்பட்டும் அழிந்திருப்பதைக் கண்டார். அவருக்குப் பெரும் கவலையாக இருந்தது. யார் என் தோட்டத்தை இப்படி பாழாக்கியிருப்பார்கள் என்று அவர் தமக்குள் பேசிக்கொண்டார்.

அவர் பேசியதைக் கேட்ட அவரின் மகள் - அவரை ஆச்சரியத்தோடு பார்த்தாள். "அப்பா, நீங்கள் கதவைத் திறந்து விடும்படி முயலார் அடிக்கடி சொல்வார். நான் திறந்து விடுவேன். அவர்தான் காய்கறிகளைப் பிடுங்கிச் செல்வார். உங்களுக்கு இது தெரிந்திருக்கும் என்றெல்லவா நான் நம்பியிருந்தேன்!" என்றாள் மகள்.

அப்பொழுதுதான் மனிதருக்கு உண்மை புலப்பட்டது. அவர் சிறிதுநேரம் மௌனமாய் நின்றார். சிறுமியை கோபிப்பதில் பயனில்லை என்று உணர்ந்த அவர்- "மகளே அடுத்தமுறை முயலார் வந்ததும் கதவைத் திறந்து விட்டு என்னிடம் ஓடிவந்து சொல். நான் அவரோடு ஒரு விசயம் பேச வேண்டும்" என்றார். அவ்வாறே அடுத்தமுறை முயலார் வந்தபோது தந்தைக்கு ஓடிச்சென்று அறிவித்தாள்.

ஆங்கிலத்தில் - எனிற் பிளைற்றன்
தமிழில் - சொக்கன்

மனிதர் 'முயலாரை இன்று பிடித்து நன்றாக வாட்டவேண்டும்' என்று முடிவுசெய்துகொண்டு, கர வலை ஒன்றோடு தோட்டத்தினுள் நுழைந்தார். காய்கறிகளைப் பிடுங்குவதில் ஈடுபட்டிருந்த முயலார் - மனிதர் வந்ததைக் காணவில்லை. மனிதர் தம் கையில் இருந்த கரவலையை வீசி, மிக எளிதாக முயலாரைப் பிடித்து வலையின் வாய்ப் பக்கத்தில் சுருள்தடம் போட்டு இறுக்கினார். இனி முயலார் தப்பியோட முடியாது!

"போக்கிரி முயலே உன்னால் என் தோட்டம் முக்கால்வாசி அழிந்து விட்டது. நான் வீட்டினுள்ளே போய் சவுக்கு எடுத்துவந்து உன்னை நொருக்கப்போகிறேன் என்று கூறிவிட்டு, வீட்டுக்குள்ளே சென்றார் மனிதர்.

சிறுமி - முயலுக்கு காவலாக அங்கேயே நின்றாள்.

முயலார் வலைக்குள் கிடந்தபடி யோசித்தார். திடீரென்டு பாட்டுப்பாட தொடங்கினார். அந்தப் பாட்டு சிறுமியை மிகவும் கவர்ந்தது. "முயலாரே முயலாரே இன்னொரு பாட்டுப் பாடும்" என்று அவள் முயலாரைக் கெஞ்சினாள்.

முயலார் தொண்டையைச் செருமினார், இருமினார். "ஐயோ தங்கச்சி திடீரென்று என் குரல் கட்டிவிட்டது. நான் நன்றாக நடனமாடுவேன். என் நடனம் - எனது பாட்டிலும் நன்றாக இருக்கும்" என்றார்.

"அப்படியானால் நடனமாடும். பார்க்க ஆசையாக இருக்கிறது" என்றாள் சிறுமி.

"வலைக்குள் இருந்தபடி நான் நடனமாடுவது எப்படி? நீ வலையில் போட்டிருக்கும் கட்டை அவிட்டுவிட்டாள் நீ என்றுமே பார்த்திராத நடனத்தை ஆடிக்காட்டுவேன்" என்றார் முயலார்.

சிறுமி - முயலாரின் நடனத்தைப் பார்க்கும் ஆசையால் வலையின் சுருக்கை அவிழ்த்து விட்டாள்.

முயலார் ஆனந்தமாகவும், அழகாகவும் நடனமாடியபடி சிறுமியை மகிழ்வித்த வண்ணம் 'தோட்டக்கதவைக் கடந்தாரோ இல்லையோ - 'தப்பினேன் பிழைத்தேன்' என்று ஒரே ஓட்டமாக ஓடி தனது வீட்டை அடைந்தார்.

சவுக்குடன் தோட்டத்துக்கு வந்த மனிதர் அவிழ்ந்து கிடக்கும் வலையையும், முயலார் அதனுள் இல்லாததையும் கண்டு பெரிதும் ஏமாற்றம் அடைந்தார். ஆனால், அவர் மகளைக் கோபிக்கவில்லை. அவள்- அவரின் செல்லப்பிள்ளையல்லவா!

# இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :- உ.எப்சிபா
கற்கும் பாடசாலை :-
இந்து மகளிர் கல்லூரி.
கற்கும் தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
பாட்டுப்பாடுதல், கதைப்புத்தகம் வாசித்தல்.



முழுப்பெயர் :- உ.பிரியா
கற்கும் பாடசாலை :-
இந்து மகளிர் கல்லூரி.
கற்கும் தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல்,
கதைப்புத்தகம் வாசித்தல்.



முழுப்பெயர் :- வீ.குகதாஸ்
கற்கும் பாடசாலை :-
விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்
கற்கும் தரம் :- 3
ஆர்வமுள்ள துறைகள் :-
கல்வித்துறை, ஆக்கம்,
முத்திரை சேகரித்தல்



முழுப்பெயர் :- ந.ஜீவிதா
கற்கும் பாடசாலை :-
நெடுந்தீவு மகா வித்தியாலயம்
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
கர்நாடக சங்கீதம்,
பரதநாட்டியம்.

முழுப்பெயர்:- கோ.மணிதாஸ்
கற்கும் பாடசாலை :- இமையாணன் அ.த.க.வித்தியாலயம்
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :- கதை வாசித்தல்,
விளையாட்டு, சித்திரம் வரைதல்.

முழுப்பெயர்:- யோ.சங்கீதன்
கற்கும் பாடசாலை :- மகாஜனாக் கல்லூரி
கற்கும் தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :- கிரிக்கெட், தொலைக்காட்சி
பார்த்தல், விளையாட்டு.

முழுப்பெயர்:- மு.யசிபன்
கற்கும் பாடசாலை :- இடைக்குருச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை.
கற்கும் தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :- பத்திரிகை வாசித்தல்,
கல்வித்துறை, விளையாட்டு.

முழுப்பெயர்:- வ.கபிலன்
கற்கும் பாடசாலை :- சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
கற்கும் தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :- உதைபந்தாட்டம், கல்வித்துறை.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :.............................
கற்கும் பாடசாலை :.............................
கற்கும் தரம் :.............................
வீட்டு முகவரி :.............................
பிறந்த திகதி :.............................
ஆர்வமுள்ள துறைகள் :.............................

.................... ....................
திகதி ஒப்பம்

.................... ....................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

## My Self

My name is Revathi Kumarathevan. I live in Alvai. I am ten years old. My father's name is S.Kumarathevan. my mother's name is K.Rathithevy. I study at J/Thambasiddy M.M.Tamil Mixed School. I have one sister and two brothers. my favourite subjects are English and Tamil. My friends name are Jalini and Karththigajini.

K.Revathi
J/Thambasiddy M.M.T.M. School
year - 05.



# தகவல் பெட்டகம்

● 1800 இல் இருந்து அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தலைநகராக இருப்பது வொஷிங்ரன் டி.சி. அதற்கு முன் அமெரிக்கா சுதந்திரம் அடைந்ததில் இருந்து பத்து ஆண்டுகள் மட்டும் இடைக்காலத் தலைநகராக இருந்தது ஃபிலடெல்ஃபியா (1790 - 1800).

● தெற்காசிய நாடுகளின் காலனி ஆதிக்கத்தில் சிக்கிக்கொள்ளாத ஒரேநாடு தாய்லாந்து.

● ஒரேநாள், ஒரேவருடம் இறந்துபோன இரண்டு அமெரிக்க முன்னாள் ஜனாதிபதிகள் - ஜோன் அடம்ஸ், தோமஸ் ஜெஃபர்சன். இது நிகழ்ந்தது ஜூலை 4, 1826 இல்.

● நீரில் வளரும் தாவரங்களை - 'ஹைட்ரோஃபைட்ஸ்' என்றழைக்கிறார்கள்.

● காந்தத்தைக் கண்டுபிடித்தவர் தாலஸ் என்ற கிரேக்க தத்துவமேதை என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். அது கண்டுபிடிக்கப்பட்ட நகரமான 'மக்னஸ்'ஸின் பெயரிலிருந்தே அதற்கு 'மக்னட்' என்று பெயர் வைத்தார்.

● ஜப்பான் நாட்டின் மிகச்சிறந்த போர் வீரர்களை 'சாமுராய்' என்றழைப்பர். 'பயம்' என்றால் என்ன வென்றே தெரியாத இவர்கள் - டோகுகவா ஆட்சியைத் தூக்கியெறிந்து இன்றைய நவீன ஜப்பான் அமைய அடித்தளம் போட்டவர்கள்.


● ஸ்பெயின் மற்றும் போர்த்துக்கல் ஆகிய இரு நாடுகளின் நாடாளுமன்றங்களின் பெயர் 'கார்டெஸ்'.

● அமெரிக்க அதிபர்களின் அதிகாரபூர்வ இல்லம் 'வெள்ளை மாளிகை'. இதில்முதன் முதலில் குடிபுகுந்தவர் அதிபர் ஜோன் அடம்ஸ்.

● உலகின் மிகப்பழைய அரண்மனை ஏமன் நாட்டில், கோம்டன் நகரத்தில் உள்ளது. இது கி.பி. 100 இற்கு முற்பட்டது.

● சிரியாவின் தலைநகரமான டமாஸ்கஸ் உலகின் மிகப்பழைமையான தலைநகரம். (கி.மு. 2500)

## கடல்யானை



'கடல் யானையின் தந்தம் பல விதங்களில் பயன்படுகிறது. இவை துருவக் கரடி, திமிங்கிலங்கள் மற்றும் வேட்டைக்காரர்களிடம் இருந்து காப்பாற்றிக்கொள்ள தந்தத்தைப் பயன்படுத்துகின்றன.


அதைவிட முக்கியமாக, தங்கள் கூட்டத்தில் தான்தான் பெரியவன் என்று அதிகாரம் செய்ய நினைக்கும் கடல் யானைகளும் தந்தத்தையே காட்டுகின்றன.

பெரிய உருவமாக இருப்பதால் இவை நிலத்தில் மிகவும் மெதுவாகவும், நீரிலே அதிகவேகமாகவும் செல்லும். இந்த வலிமையான பாலூட்டி தனக்குப் பிடித்த உணவைச் சேகரிப்பதற்காக 300 அடி ஆழம்கூட எளிதாக 'டைவ்' அடிக்கும் திறமை படைத்தது. இவற்றுக்கு ஒரு மைல் தூரத்திலிருந்து இன்னொரு கடல்யானை குரல் கொடுப்பதை அறிந்து, பதில் சொல்லும் அளவு கூர்மையான கேட்கும் திறனும் உண்டு. ஒரேநேரத்தில் 4000 நத்தைகளை அப்படியே விழுங்கக்கூடிய சாப்பாட்டு ராமனும்கூட!

## உங்கள் கைவண்ணம்



ஆ.பாலபவான்,
தரம் - 04,
யாழ்.மேலைப்புலோலி,
சைவப்பிரகாச வித்தியாலயம்.



சு.பிரணவன்,
தரம் - 02
வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம்.

## விடுகதைகளும் விடைகளும்

1. அவர் வெடித்தார், இவர் உடுத்தினார். அது என்ன?
   பருத்தி ஆடை
2. பட்டணம் பக்கத்தில், எட்டித் தான் பார்க்கமுடியவில்லையே. அது என்ன?
   முதுகு
3. சிரித்தால் சிரிப்பான், அழுதால் அழுவான்? அவன் யார்?
   முகம் பார்க்கும் கண்ணாடி
4. வீட்டைச் சுற்றி வேலி அது என்ன?
   கண் இமை
5. தலையில் மோதிப் பல்லை உடைப்பான் அவன் யார்?
   சீப்பு

1. காட்டிலும், மேட்டிலும் முளைக்காத பனை. அது என்ன?
   கற்பனை
2. பச்சை உடலுக்குச் சிவப்பு அலகு. அது என்ன?
   கிளி
3. கல்லிலே பூத்து, வாயிலே சிவக்கும் பூ. அது என்ன?
   சுண்ணாம்பு
4. மாலைகட்ட உதவாத பூ. அது என்ன?
   சிரிப்பு
5. முள்ளுக்கூட்டைத் தாண்டினால் இனிப்புக்கூடு. அது என்ன?
   பலாப்பழம்

*மதுரா நாகேஸ்வரன்*
*உடுவில் மகளிர் கல்லூரி*

## பழமொழிகள்

1. அறையில் ஆடியல்லோ அம்பலத்திலாட வேண்டும்.
2. ஆறறிலே போட்டாலும் அளந்து போடு.
3. இரக்கப் போனாலும் சிறக்கப் போ.
4. ஈட்டி எட்டிய மட்டும் பாயும். பணம் பாதாளம் மட்டும் பாயும்.
5. உண்ணாச்சொத்து மண்ணாய்ப்போகும்.
6. ஊரோடு ஒத்து வாழ்.
7. எதார்த்தவாதி வெகுசன வீரோதி.
8. ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது.
9. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
10. கழுதை அறியுமா கற்பூர வாசனை.

அ.அபினா.



நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

*சிந்தனைக்கு*

இடமெல்லாம் கொல்லாத் தகைத்தே இடமில்லாக்
காலும் இரவு நல்லாச் சால்பு

- *திருக்குறள்.*

# நமது நோக்கு

## கடனாளிகள் மட்டுமல்ல... !

ரோக்கியோவில் இலங்கைக்குக் கிடைத்திருக்கும் நிதியுதவிகள் தொடர்பாக அரசாங்கம் பெருமைப்பட்டுக் கூறிக்கொண்டாலும், இந்த நிதியுதவி - இலங்கையரை மேலும் கடனாளியாக்கவே உதவியிருப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சுமத்தியிருக்கின்றன.

இதுவரையில், இலங்கையர் ஒவ்வொருவரும் 73 ஆயிரம் ரூபா கடனாளியாக இருந்தனர். ரோக்கியோ நிதியுதவிக்குப் பின்னர், இத்தொகை 95 ஆயிரம் ரூபாவாக உயர்ந்திருப்பதாகப் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பேச்சாளரான சரத் அமுனுகம கூறியிருக்கிறார். முன்னாள் மத்திய வங்கி ஆளுநரும், சிஹல உறுமயவின் முக்கியஸ்தருமான நிஹால் கருணாதிலகவும் இதே கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

இவர்களது இக்கருத்துக்களிலுள்ள உண்மை - நிதர்சனமானது, யதார்த்தமானது என்பதைத் தவிர - பொதுஜன ஐக்கிய முன்னணி என்னவோ இலங்கையரின் கடன்சுமையைக் குறைக்கவும், சிஹல உறுமய இலங்கையின் பொருளாதாரத்தை வளப்படுத்தவும் முயற்சித்தன என்று கூறுவதற்கில்லை.

ஆனால் - இத்தரவுகள் இலங்கையின் பொருளாதாரத்தின் எதிர்காலத்தை ஊக்கப்படுத்தும் தகவல்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை என்பதுதான் இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

கடந்த பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நடாத்திய போரினாலும், ஊழலும், சுரண்டலும் புரையோடிப்போன அரச இயந்திரத்தாலும், அரசியல்வாதிகளின் கபளீகரங்களாலும்- இலங்கையின் பொருளாதாரம் அடிமட்டத்திறகுச் சென்றுவிட்ட நிலையிலும், வங்குரோத்து நிலைக்கு ஆளாகிவிட்டபோதும் -

இலங்கையின் பொருளாதாரத்தை வெளிநாடுகளுக்கு அடகுவைத்தேனும் நாட்டைச் சராசரி நிலைக்குக் கொண்டுவரவேண்டுமென்ற நோக்கத்தோடுதான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆட்சிபீடமேறினார்.

வெளிநாடுகளின் நிதியுதவியின்றி இலங்கையின் பொருளாதாரத்தைச் சிக்கலுக்குள்ளிருந்து மீட்கமுடியாததென்பதைத் தெரிந்து கொண்டவராகத்தான் பிரதமர் ரணிலின் நகர்வுகள் இருந்தன.

ஏற்கனவே - ஐக்கிய தேசியக் கட்சியின் பாரம்பரியத்தின்படியான முதலாளித்துவ நெருக்கமும், மேற்கத்தைய நாடுகளின் பாதிப்பும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் விட்டுவைக்கவில்லை.

வெளிநாட்டு நிதியுதவி மூலமே மீட்பு என்ற நிலையில், யுத்தநிறுத்தம் அமுலானதும், விடுதலைப்புலிகளுடனான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டதும் - இந்த வெளிநாட்டு நிதியுதவிக்கான வாய்ப்பை ரணில் அரசாங்கத்திற்கு மேலும் வழங்கின.

இந்த வாய்ப்பை உறுதிப்படுத்துவதற்காக - பொருளாதார அக்கறையைக் கடந்தும் இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்திலும் நிதியுதவி வழங்கும் நாடுகளின் செல்வாக்கைப் பரவவிடுவதற்கு ரணிலிடம் தளர்வு காணப்பட்டது.

இந்தவகையில் - இலங்கையின் அரசியல் - பொருளாதாரப் பிரச்சினைகளுக்கான தீர்வு முயற்சிகளில், அந்நிய சக்திகளின் தலையீட்டை, செல்வாக்கை அனுமதிப்பவராகத்தான் ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சிகள் இன்று விரிவடைந்திருக்கின்றன.

ஒருநிலையில் இது - இலங்கையில் சமாதானத்தை ஆர்வத்தோடு வேண்டிநின்று ஆதரவுதரும் அனுசரணைப் பாத்திரத்தையும் மீறி - ஒஸ்லோவிலும், ரோக்கியோவிலும் வெளிப்பட்டதுபோல ஆதிக்கமிகு மத்தியஸ்தர் நிலைக்கு - நிதியுதவி தருவோரிற்கு இடமளிக்கச் செய்திருக்கிறது.

இடம் கிடைத்தால் மடம் கட்டுபவனைப்போல - ஆலோசனை வழங்கியவர்கள், இன்று அறிவுரையும், அறிவுறுத்தலும் தருபவர்களாக மாறிவருவதற்கும் வழியேற்பட்டிருக்கிறது.

இது - ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஏற்றதானாலும் கூட, தன்மானமும் சுயகௌரவமும் கொண்ட தமிழினத்திற்குத் தலைமை தாங்கும் விடுதலைப் புலிகளுக்கு ஒவ்வாமையாகிவிட்டதே இன்று பிரச்சினைக்குரியதாகியிருக்கிறது.

தனது நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்காக - எவர் குட்டினாலும், தன் தலையை நீட்டி வாங்கிக்கொள்ள ரணில் தயாராக இருந்தாலும்-

தியாகத்துடனும், துணிவுடனும், நியாயத்துடனும் போராடி - இன்று தனித்துவமான, பலமிக்க மக்கள் சக்தியெனத் தலைநிமிர்ந்து நிற்கும் விடுதலைப் புலிகள்- இலங்கை அரசாங்கம் போல அடங்கிச்செல்லத் தயாராக இல்லாததே இன்று உலகில் பேசப்படும் செய்தியாயிருக்கிறது.

இந்தநிலையில் - இலங்கையர்கள் மேலும் மேலும் கடனாளியாவதோ, அல்லது இலங்கையின் 'சுயாட்சியும்', 'இறைமையும்' வெளிநாடுகளுக்குத் தாரை வார்க்கப்படுவதோ - ரணில் அரசாங்கத்திற்கு உணர்வுக்குரிய பிரச்சினையாகிவிடாது.

ஆனால் - வெளிநாடுகளின் உதவி, இப்போதைக்கு - தனது அரசாங்கத்தைக் கொண்டு நடத்துவதற்குரிய சாதகத்தை ரணிலுக்குத் த்ந்தாலும் -

இந்த உதவியினூடாக இனிவரும் காலத்தில் உள் நுழையப்போகும் ஆதிக்கமும், அழுத்தங்களும் - ஓரளவேனும் சுயமரியாதையுள்ள சிங்கள மக்கள் தொகுதியினரைத் தாக்கும்போதுதான், அதன் மறுபக்கத்தை ரணில் உணர்ந்துகொள்ளக் கூடியதாக இருக்கும்.

அப்போது கடனாளிகளாக மட்டுமல்ல, தம்மை ஏகாதிபத்தியத்தின் - உலகமயமாதலின் விசுவாசமிக்க அடிமைகளாகவும் - தாம் விரும்பாவிட்டாலும் மாற்றிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம், சிங்கள மக்களை அழுத்திக் கொண்டிருக்கும்.

# நாங்கள் போரை விரும்பவில்லை; அரசபடைகளே எம்மைச் சீண்டுகின்றன!

## நெல்லியடி மாணவர் எழுச்சிநாள் நிகழ்வில் அமுதாப் உரை

(நவிண்டில்)

எந்தப் படையுடனும் சண்டை பிடிக்கப் புலிகள் தயாராகவே உள்ளனர். ஆனால், நாங்கள் போரை விரும்பவில்லை. நாங்கள் இரத்தத்தைக் காணத் துடிக்கவில்லை. ஆனால், அரசாங்க படைகள்- தினமும் புலிகளைச் சண்டைக்கு இழுத்துக் கொண்டே இருக்கின்றன.

-என்று நெல்லியடியில் இடம்பெற்ற மாணவர் எழுச்சிநாள் கூட்டத்தில் உரையாற்றிய விடுதலைப் புலிகளின் தாக்குதல் படையணியைச் சேர்ந்த அமுதாப் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

இலங்கை சுதந்திரமடைந்து 55 வருடங்களாகிவிட்டன. 55 வருடங்களாக தமிழ்மக்கள் சாகடிக்கப்பட்டிருக்கிறார்கள்.

80,000 இற்கு மேற்பட்ட மக்கள் அரசியல்வாதிகளால், அரசபடைகளால் கொல்லப்பட்டார்கள், புதைக்கப்பட்டார்கள். பொதுமக்களது அடிப்படை உரிமைகளைத் தருவது பற்றி அரசாங்கம் கருத்தில் எடுக்காமல் இருக்கின்றது.

நாங்கள் 1972 இல் விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்தோம்.

கடந்த 35 வருடங்களாக விடுதலைப் போராட்டம் வீறுநடைபோட்டுக் கொண்டிருக்கிறது.

கடந்த 20 வருட காலத்தில் ஆயிரக்கணக்கான உயிர்களையும், இரத்தத்தையும் கொடுத்திருக்கிறோம்.

16,680 போராளிகளையும், 80 ஆயிரம் மக்களையும் பறிகொடுத்து, இந்தச் சமாதான சூழல் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இதற்காக, ஒரு இலட்சம் பேர் செத்து மடிந்திருக்கிறார்கள்.

வடக்கு - கிழக்கிலுள்ள 35 இலட்சம் தமிழ்மக்களின் விடுதலைப் போருக்காக, கௌரவமான பாதுகாப்பிற்காக ஒரு இலட்சம் பேர் செத்து மடிந்திருக்கிறார்கள். 35 பேருக்கு-ஒருவர் என்ற கணக்கில் நாம் உயிர்களை இழந்திருக்கிறோம்.

ஒப்பந்தத்தின்படி - இராணுவத்தினர் கோயில்கள், பாடசாலைகள், பொதுஇடங்களில் இருந்து வெளியேறவேண்டும்.

இற்றைவரைக்கும் இராணுவம் வெளியேறவில்லை.

எங்களுக்கு இரண்டு பங்கங்கள் இருக்கின்றன. ஒன்று- அரசியல். மற்றது- சண்டை. எங்களது அடிப்படை உரிமைகளை சிங்கள அதிகாரவர்க்கத்திடமிருந்து அடித்துப்பறிக்க எங்களால் முடியும். இந்தப் பேச்சுவார்த்தை ஆரம்பித்தபோது குதிரை வேகத்தில் இருந்தது. இப்பொழுது ஆமை வேகத்திற்கு வந்திருக்கின்றது.

இரண்டரை வருடங்களாக படைகள் கைப்பற்றிய இடங்களை ஆறே நாட்களில் நாங்கள் மீட்டெடுத்தோம்.

புதிய சாதனைகளை, வரலாறுகளை, சரித்திரங்களை நாங்கள் படைத்திருக்கிறோம். இன்று ஆனையிறவுத் தளம் புலிகளிடம் மண்டியிட்டுக்கிடக்கிறது.

வல்லரசுகளுக்கு எதிராகவும் நாங்கள் போராடினோம். இராணுவ ரீதியாக வெல்லமுடியாத- யாராலும் நினைத்துப் பார்க்க முடியாத, பலம்வாய்ந்த இராணுவ சக்தியாக இன்று விடுதலைப் புலிகள் இயக்கம் மிளிர்ந்து நிற்கின்றது.

எந்த நேரத்திலும், எந்த வேளையிலும் சண்டை செய்ய விடுதலைப் புலிகள் தயாராகவே நிற்கின்றார்கள்.

இன்றைக்கும் சொல்கிறோம், என்றைக்கும் சொல்வோம் எங்களது இராணுவப்பலத்தை, போர்க்கலையை எந்த வேளையிலும் யாராலும் மழுங்கடிக்க முடியாது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், தமிழீழ மக்களுக்கும் இரண்டு நாடுகளுடன் அடிபட்ட வரலாறு இருக்கிறது.

24 மாதங்களுக்கு மேலாக இங்கிருந்த, உலகத்தின் 4 ஆவது வல்லரசுப்படையான இந்தியப் படையினர் ஒரு லட்சம் பேருக்கு எதிராக 2000 போராளிகளை வைத்துப் போரிட்டோம்.

ஒரு லட்சம் இந்தியப் படையினர் அடித்தார்கள். ஆனால் புலிப்படை தளர்ந்து போகவில்லை. தமிழ் மக்களின் உரிமைளை வென்றெடுக்க புலிப்படை துணிந்து போராடியது.

புலிகளின் வரலாறு முடிகிறது என்று சொன்னார்கள். ஆனால், புலிகள் புதிய அத்தியாயம் எழுதினார்கள். இந்தியர்கள் புத்தகத்தை எழுதினார்கள்- விடுதலைப் புலிகளின் மனோபலத்தைச் சந்தித்தோம், தோல்வியைச் சந்தித்தோம் என்று.

புலிகள் இயக்கத்தையும், புலிகள் இயக்கத் தலைவரையும் இனியும் ஏமாற்றலாம் என்று நினைத்தால், அது நினைப்பவர்களின் முட்டாள்தனமாகும். கடந்த 16 மாதத்தில் 14 போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர். உலக நாடுகளும் பார்த்துக் கொண்டிருக்கின்றன.

யுத்த காலத்திலே போராளிகளும், மக்களும் சாவது என்பது இயல்பு. சமாதான காலத்தில் போராளிகள் சாவதும், மக்கள் சாகடிக்கப்படுவதும் இயல்பல்ல.

சுட்டுக்கொல்லக் கொல்ல சாகிற இனமல்ல நாங்கள். எங்களுக்கு வீரம் இருக்கிறது. ரோசம் இருக்கிறது. வட-கிழக்கு நிலத்தை மீட்டெடுக்கும் நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது.

எந்தப் படையுடனும் சண்டை பிடிக்க புலிப்படை தயாராகவே இருக்கிறது. ஆனால், நாங்கள் போரை விரும்பவில்லை. நாங்கள் இரத்தத்தைத்தைக் காணத்துடிக்கவில்லை. ஆனால், அரச படைகள் புலிப்படையை தினமும் சண்டைக்கு இழுத்துக் கொண்டே இருக்கின்றன என அவர் மேலும் தெரிவித்தார.

(116)

# லொத்தர்சபை கணக்கு வழக்குகளை ஜனாதிபதி சந்திரிகா கோருகின்றார்!



தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையின் கடந்த இரண்டு வருட கால செலவினங்கள் உட்பட சில முக்கிய விடயங்கள் குறித்துத் தனக்குப் பூரண அறிக்கை சமர்ப்பிக்குமாறு, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்படி சபையின் தலைவரைக் கோரியுள்ளார்.

பொருளாதார மறுசீரமைப்பு, விஞ்ஞான கைத்தொழில் அமைச்சர் மிலிந்த மொறகொடவின் பொறுப்பிலிருந்துவந்த தேசிய லொத்தர்சபையை - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அண்மையில் தன்னிச்சையாகப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

இதையடுத்தே, தேசிய லொத்தர்சபையின் வருமானம் மற்றும் செலவினங்கள் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் குறித்த அறிக்கையை தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவரிடமிருந்து சந்திரிகா கோரியுள்ளார்.

2002 ஆம் ஆண்டில் தேசிய லொத்தர்சபைக்கு ஏற்பட்ட மூலதனச் செலவினங்கள், வருமானங்கள் தொடர்பாகவும் - இந்த வருட முதல் அரையாண்டுக்கான நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாகவும் விரிவான விளக்க அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறும் கோரப்பட்டுள்ளது. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சார்பில், அவரது செயலாளர் இது தொடர்பான கடிதத்தை, தேசிய அபிவிருத்தி லொத்தர்சபையின் தலைவருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

தேசிய அபிவிருத்தி லொத்தர்சபையின் தலைவர் தமக்கு ஒத்துழைப்பு வழங்கினால், தொடர்ந்தும் அப்பதவியில் இருக்கலாம் என ஜனாதிபதி சந்திரிகா முன்னர் அறிவித்திருந்தார். இதன்படி, அவர் எவ்வாறு ஒத்துழைப்பு வழங்குகிறார் என்பதைப் பரிசீலிக்கவே இவ்வாறான அறிக்கையைக் கோரியிருப்பதாகக் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

### உள்ளூராட்சி சபைத் தேர்தல் கடமைக்கு

# புலிகளின் பகுதிக்குள்ளும் பொலிஸார் செல்வார்களாம்!

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படும்போது, தேர்தல் பணிகளில் ஈடுபடுவதற்காக பொலிஸ்படைப் பிரிவுகள் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப்பகுதிகளுக்கும் அனுப்பிவைக்கப்படலாமென - உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எம்.என்.ஜுனைட் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இம்மாதம் 25 ஆம் திகதி மேற்படி உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தது.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் தேர்தல் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

இவ்விடயம் தொடர்பாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எம்.என்.ஜுனைட் - தேர்தல் திணைக்களத்துக்கு வழங்கிய ஆலோசனையிலேயே - வன்னிக்குப் பொலிஸாரை அனுப்பும் விடயமும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி - வன்னிப் பகுதியிலும் பொலிஸார் தமது கடமைகளைச் செய்யலாம் என்றும் எம்.என்.ஜுனைட் மேலும் தெரிவித்தார். (01)

# கல்வி, சுகாதார நிதி ஒதுக்கீடுகளை குறைக்க வேண்டாம் என்கிறார் சந்திரிகா

### பிரதமரிடம் கேட்டிருப்பதாக அவரே தெரிவிப்பு

(கொழும்பு)

கல்வி மற்றும் சுகாதாரத்துறை ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகளைக் குறைக்கவேண்டாம் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமும், அமைச்சரவையிடமும் தாம் கோரியிருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் பல்கலைக்கழக துணைவேந்தர்களை- ஜனாதிபதி மாளிகையில் சந்தித்துப் பேச்சு நடத்தியபோதே, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேலும் கருத்து வெளியிடுகையில்,

கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளுக்கான நிதி ஒதுக்கீடுகளைக் குறைக்கும்போது அது நாட்டைப் பாதிக்கும் -

இதனால், இத்தகைய துறைகளுக்கான நிதி ஒதுக்கீடுகளைக் குறைக்கவேண்டாம் எனப் பிரதமரையும், அமைச்சரவையையும் கேட்டுள்ளேன்.

பல்கலைக்கழகங்களுக்குச் செலவிடப்படுவதற்காக உலக வங்கியால் வழங்கப்பட்ட 40 மில்லியன் ரூபா பணம், இவ்வருடம் செலவிடப்பட்டுள்ளது. இதற்கான காரணம் என்னவென்று தெரியவில்லை.

பல்கலைக்கழகங்களுக்கு இருக்கும் பிரச்சனைகள் குறித்து மூன்றாம்நிலைக் கல்வி அமைச்சருடன் கலந்துரையாடி உரிய தீர்வுகளைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாக துணைவேந்தர்களிடம் ஜனாதிபதி சந்திரிகா உறுதிவழங்கினார்.

# பனை, தென்னை வளங்களைக் காத்து குடாநாட்டுச் சுற்றுச்சூழலைப் பேணுவோம்

யாழ்.குடாநாட்டின் பிரதான தாவரப் போர்வையாகப் பனை, தென்னை மரங்கள் காணப்படுகின்றன. இவ்வளங்கள்- குடாநாட்டு மக்களாலும், இராணுவத்தினராலும் கண்மூடித்தனமாக அழிக்கப்பட்டு வருகின்றன. எனவே, குடாநாட்டில் பனை, தென்னை மரங்களை நடுகை செய்து பராமரித்து பனைவளம், தென்னைவளம் செழிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இலங்கையில் உள்ள 111 இலட்சம் பனைகளில், 99 வீத மானவை யாழ்.குடாநாட்டிலேயே இருக்கின்றன. யாழ்ப்பாணத்



தில் தீவகம் மற்றும் தெல்லிப்பளையில் அதிகமாக இவை காணப்படுகின்றன. இலங்கையில் 6.8 கோடி தென்னைகளும் இருக்கின்றன.

பனைகள் - தான்தோன்றியாக வளர்வதனால், தென்னையைவிடக் கூடுதலாக வளர்கின்றன. குடாநாட்டில் - பளை, சாவகச்சேரி, மருதங்கேணி மற்றும் நல்லூர்ப் பிரதேசங்களில் தென்னைகள் அதிகமாக வளர்கின்றன.

பற்பல காரணங்களுக்காக பனைமரங்கள் தறிக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் பிரதானமாக வீடு கட்டுவதற்கே பனை மரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. தென்னிலங்கையில் வீடு கட்ட தென்னை மரங்களைப் பாவிக்கின்றனர். ஆனால், வடக்கு - கிழக்கில் பனைமரத்தைப பயன்படுத்துகிறார்கள், மேலும, செம்மண் பிரதேசத்தில் பணப்பயிர்ச் செய்கைக்காக பனைகளை அகற்றி விட்டு நிலத்தைப் பயன்படுத்துகிறார்கள்.

தற்காலத்தில் போர் நடவடிக்கைகள் காரணமாக - பல பனை மரங்களும், தென்னைமரங்களும் தலையற்ற முண்டங்களாகக் காட்சியளிக்கின்றன. பல்குழல் எறிகணைக்கும், விமானக் குண்டு வீச்சுக்கும் தப்பிப்பிழைத்த பனை, தென்னை மரங்களைக்கூட இராணுவத்தினர் வெட்டிச்சென்று பாதுகாப்பு அரண்கள் அமைத்து வருகின்றனர்.

உயர்பாதுகாப்பு வலயம், முகாம் விஸ்தரிப்பு என்ற போர்வையில் - குடாநாட்டில் நெருக்கமாக உள்ள பனை, தென்னை மரங்களைப் படையினர் தறித்து விடுகின்றனர். இத்தகைய இராணுவத்தினரது செயற்பாடுகளில்- வருடம் ஒன்றிற்கு சுமார் 5 இலட்சம் பனைமரங்களுக்குக் குறையாமல் அழிக்கப்பட்டுள்ளன. மேலும் - மக்கள் பற்றைகள், புதர்களை வெட்டி நெருப்பு வைக்கும்போது பனைமரங்களின் வடலிகளையும் எரித்து விடுகின்றார்கள். முளையிலேயே கருகிவிடும் பனைவளம் எவ்வாறு செழிப்படையும்?

தென்னை மரங்கள் மற்றும் பெரிய மரங்கள் அழிக்கப்படுவதால், குடாநாட்டுச் சுற்றுசூழல் பாதிப்படைகிறது. காலநிலையில் மாற்றம் ஏற்படுகிறது. மழை காலங்களில் மழைகிடைப்பதில்லை. வடக்கு-கிழக்கு மாகாணத்தில் குறைந்தது இரண்டு இலட்சம் ஹெக்ரயர் நிலத்தில் பனை வளர்க்கப்பட வேண்டும். இச்செயற்பாட்டின் மூலமே அழிந்துபோகும் பனை வளத்தைப் பாதுகாக்கமுடியும்.

பனைவளத்தைப் பெருகச் செய்வதற்காக,1978 இல் நிறுவப்பட்ட பனை அபிவிருத்திச்சபை - தெருவோரங்கள், ரயில் பாதை ஓரங்கள், தரிசு நிலங்கள், பாடசாலைகள், ஆலயங்கள், மயானங்கள் மற்றும் வீட்டுநிலங்களிலும் பனம் விதைகளை நாட்டிவருகின்றது.

வளம் குறைந்த நிலங்களில் பனையைப் பெருந்தோட்டப் பயிராகவும் உருவாக்க வேண்டும் எனற நோக்கில், மாதிரிப் பனந்தோட்டங்களை பனை அபிவிருத்திச்சபை உருவாக்கி வருகின்றது. யாழ்.குடாநாட்டில் மாமுனையில் 20 ஹெக்ரயரில் மாதிரிப் பனந்தோட்டம் 1982 ஆம ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. புலோப்பளையில் 04 ஹெக்ரயரும், குடத்தனையில் 04 ஹெக்ரயரும், கரம்பனில் 04 ஹெக்ரயரும், அர்ாலியில் 04 ஹெக்ரேயரும் பனந்தோட்டங்கள் 1998 ஆம் ஆண்டு நிறுவப்பட்டன.

மாமுனையில் உள்ள பனந்தோட்டங்களில் பனையுடன் மரமுந்திரிகை, தென்னை போன்றனவும் வளர்க்கப்படுகின்றன. 1998 இல் பனைவளத்தைப் பாதுகாக்க இலங்கையில் மேற்கொண்ட பெருமுயற்சியினால் 5 1/2 இலட்சம் பனம் விதைகள் நடப்பட்டன. அத்துடன், நான்கு பனம் தோட்டங்களும் உருவாக்கப்பட்டன. யாழ்.மாவட்டத்திலுள்ள பனைகளின் பரம்பலை இந்த அட்டவணையில் காணலாம்.

யாழ்.மாவட்டத்தின் பனைமரங்களின் பரம்பல

| பிரதேசசெயலர்பிரிவு | பனை (ஆயிரம்) |
|---|---|
| நெடுந்தீவு/வேலைணை | 824,1 |
| ஊற்காவற்துறை | 256,2 |
| தெல்லிப்பளை | 705,0 |
| உடுவில் | 102,2 |
| சங்கானை | 310,6 |
| சண்டிலிப்பாய் | 239,9 |
| கோப்பாய் | 180,7 |
| யாழ்ப்பாணம் | 3,9 |
| நல்லூர் | 51,6 |
| சாவகச்சேரி | 321,5 |
| கரவெட்டி | 246,8 |
| பருத்தித்துறை | 167,5 |
| மருதங்கேணி | 90,0 |

தென்னைமரங்கள் - போர் நடவடிக்கை காரணமாக அழிவடைந்து காணப்படினும், குடாநாட்டு மக்கள் வீடுகள்



தோறும் தென்னைமரங்களை நட்டு, பிள்ளைகளைப்போல் பராமரித்து வருகின்றனர். யாழ்ப்பாணம், கிளிநொச்சி உட்பட 8,327 ஹெக்ரயர் நிலப்பரப்பில் தென்னைகள் உள்ளன.

அண்மைக்காலங்களில் பனை, தென்னை மரங்களின் அழிவைத்தடுக்க, குடாநாட்டின் தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கம் பல முயற்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

யாழ். குடாநாட்டின் கற்பகதருக்களாகப் பனை, தென்னை

எ.டொமிற்றா
யாழ்.பல்கலைக்கழகம்.

மரங்கள் உள்ளன. எனவே, குடாநாட்டு மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு நல்கி - பனை, தென்னை வளங்களைப் பேணல்வேண்டும். ஒரு மனிதன் காலுக்கு அணியும் பாதணியிலிருந்து உணவுப் பானங்கள், குடிவகைகள், மென்பானங்கள், தளபாடங்கள், அழகுசாதனப் பொருட்கள் முதல் தலைக்கு அணியும் தொப்பிவரை பனை மரங்களிலிருந்தும், தென்னை மரங்களிலிருந்தும் பெறமுடிகிறது. எனவே, இம்மரங்களை மீள் நடுகைசெய்து, பராமரித்து, இருக்கின்ற மரங்களைப் பாதுகாத்து, எதிர்கால சந்ததியினருக்கு வளமான நற்சூழலை அமைத்துக்கொடுக்க அனைவரும் முன்வரவேண்டும். ●

## மறிச்சுக்கட்டி வீதியைத் திருத்த பாதுகாப்பு அமைச்சர் உத்தரவு

(கொழும்பு)

புத்தளம்- மறிச்சுக்கட்டி வீதியைத் திருத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன படையதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

முசலிப் பகுதி மக்கள் மீளக்குடியமர ஆரம்பித்துள்ளதால், மறிச்சுக்கட்டி வீதியைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்தே, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன இந்த உத்தரவை விடுத்துள்ளார்.

நீண்டகாலமாக இந்த வீதி பொதுமக்களின் பாவனைக்குத் தடை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## போயா தினத்தில் விலங்குகளை வெட்டுவோர் மீது நடவடிக்கை

### மானிப்பாய் பிரதேசசபை அறிவிப்பு

(மானிப்பாய்)

போயா தினங்களில் இறைச்சிக்காக விலங்குகளை அறுப்பதும், விற்பனை செய்வதும் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

போயா தினத்தில் இறைச்சிக்காக விலங்குகள் அறுக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால், பிரதேச சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என, மானிப்பாய் பிரதேசசபையின் உள்ளூராட்சி உதவியாளர் அறிவித்துள்ளார்.

வலி. தென்மேற்கு மானிப்பாய்ப் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதியிலுள்ள சில கடை உரிமையாளர்களால், போயா தினத்தில் விலங்குகள் அறுக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றும் -

இவர்கள் மீது பிரதேசசபை நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வலி. தென்மேற்கு பிரதேசசபை - மானிப்பாய் எல்லைப் பகுதியில் போயா தினத்தில் இறைச்சிக்காக விலங்குகளை அறுக்கும் கடை ஊழியர்களது விபரங்களை உடன் அறிவிக்குமாறு, பொதுச்சுகாதார பரிசோதகர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

### கலந்துரையாடல்

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில், நாளைமறுநாள் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு மகளிர் மேம்பாடு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இடம் பெறவுள்ளது.

### பரிசளிப்பு விழாவும் கலை நிகழ்ச்சியும்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு பிடாரி அம்பாள் சன சமூக நிலையம் நடத்திய 12 ஆவது பொது அறிவுப் பரீட்சையின் பரிசளிப்பு விழாவும், கலை நிகழ்ச்சிகளும், மேற்படி சனசமூக நிலைய அரங்கில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிலையத் தலைவர் சுரேஸ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் - பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட துணை அரசியற் துறைப் பொறுப்பாளர் செம்மணன் கலந்துகொள்வார்.

### தற்கொலைத் தாக்குதல் உடைத் தொகுதியை

## வீட்டில் மறைத்து வைத்திருந்தவருக்கு ஐந்து வருடச் சிறைத்தண்டனை!

வீட்டில் தற்கொலைத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்படும் உடைத் தொகுதியை வைத்திருந்த ஒருவருக்கு, கொழும்பு உயர் நீதிமன்றம் ஐந்து வருட கடூழியச் சிறைத்தண்டனையை விதித்துள்ளது.


இது குறித்து மேலும் தெரிய வருவதாவது -

திருநெல்வேலி- மாரியம்மன் வீதியைச் சேர்ந்த சதாசிவம் விமலகுமார் (சுகந்தன்) என்பவர், 1997 ஆம் ஆண்டு டிசம்பர் 14 ஆம் திகதி மட்டக்குளி- காக்கைதீவிலுள்ள தனது வீட்டில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் அங்கியை வைத்திருக்க அனுமதித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ்க் கைதான இவருக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவர் மீது வழக்குத் தாக்கல் செய்த பொலிஸ் அதிகாரி நவரட்ண மாரசிங்க - சந்தேகநபர் தனது வீட்டு சீலிங்குக்குள் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் அங்கியை மறைத்து வைத்திருந்தார் என்றும், இது குறித்துப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கத் தவறியமை கடுமையான குற்றம் என்றும் தெரிவித்திருந்தார்.

பொலிஸ் அதிகாரியின் வாதத்தினை ஏற்றுக்கொண்ட நீதிபதி சரத் அம்பேபிட்டிய - சந்தேகநபருக்கு ஐந்து வருட கடூழிய சிறைத்தண்டனையை விதித்துத் தீர்ப்பளித்தார்.



இரண்டாம் உலக இந்து மாநாட்டினை முன்னிட்டு - வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் சைவசமய அபிவிருத்திக் கழகம் நடாத்திய சைவ சமய பொது அறிவுப் போட்டியில், கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மாணவி சந்தானகுமார சர்மா சக்திதாஜினி - பரிபாலனசபைத் தலைவர் சுப்பிரமணியத்திடமிருந்து பரிசில் பெறுவதைப் படத்தில் காணலாம்.

# அமெரிக்கப் படை பழிவாங்கும் தாக்குதல்; 100 ஈராக்கியர் இரு தினங்களில் பலி!

## அமெரிக்கக் ஹெலி, யுத்த விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டன



ஈராக்கில் - சதாம் ஹூசைனின் ஆதரவாளர்களுடன், அமெரிக்கப் படையினர் நடத்திய கடுமையான சண்டைகளில், இதுவரை 100 ஈராக்கியர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

கடந்த வியாழக்கிழமை முதலாக - சதாம் ஆதரவாளர்களைக் குறிவைத்து, அமெரிக்கப் படைகள் இத்தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

பக்தாத்திற்கு வட - கிழக்கேயுள்ள பலாத் என்னும் பகுதியில் - ஆர்.பி.ஜி. கொண்டு, அமெரிக்க டாங்கியொன்று தாக்கப்பட்டதைத் தொடர்ந்து - அமெரிக்கர்கள் நடத்திய தாக்குதலில் - 27 ஈராக்கியர்கள் கொல்லப்பட்டனர்.

இதன் பின்னர் - அமெரிக்கர்களால் 'தீவிரவாதிகள் முகாம்' எனக் குறிப்பிடப்பட்டு நடத்தப்பட்ட மற்றொரு தாக்குதலில் - குறைந்தது 70 ஈராக்கியர்கள் கொல்லப்பட்டனர்.

கடந்த மே மாதம் முதலாம் திகதி தொடக்கம், நேற்றுவரை - ஈராக்கின் பல்வேறு பகுதிகளில், அமெரிக்கப் படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில், 40 அமெரிக்கர்கள் வரை கொல்லப்பட்டதைத் தொடர்ந்து - பழிவாங்கும் நடவடிக்கையாக புதிய தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது.

தம்மீது - சதாமின் பாத் கட்சி அனுதாபிகளும், ஈராக்கின் முதற்தரப் படையணியாக இருந்த, குடியரசுப் படையின் முன்னாள் சிப்பாய்களும் தாக்குதல்களை நடத்துவதாக அமெரிக்கர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தமது புதிய தாக்குதல்கள் மிகக் கடுமையானதாக இருந்ததாகவும், தம்மை எதிர்த்தோர் ஆயுதங்களுடன் தயார் நிலையிலேயே போரிட்டதாகவும், ஈராக்கின் அமெரிக்க விமானப்படைத் தளபதி ஜெனரல் ரிச்சர்ட் மெயர்ஸ் கூறினார்.

இச்சண்டைகளில், தமது தரப்பில் ஒருவரே காயமடைந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

### அப்பாச்சே ஹெலி, விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டன

இதேவேளை - கடந்த வியாழனன்று அமெரிக்கப் படையின் நவீனரக அப்பாச்சே ஹெலிகொப்ரர்களும், எவ்-16 யுத்த விமானமொன்றும் ஈராக்கில் வைத்துச் சுட்டுவீழ்த்தப்பட்டிருக்கின்றன.

ஈராக் மீதான போர் முடிவுக்கு வந்துவிட்டதாக, அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் அறிவித்த பின்னர் - முதற்தடவையாக அமெரிக்க விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டிருக்கின்றன.

### எண்ணெய்க் குழாய்களுக்கு தீ வைக்கப்பட்டது

வட ஈராக்கிலிருந்து துருக்கிக்குச் செல்லும் பிரதான எண்ணெய் குழாயொன்று தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

குண்டுகள் வைத்து இக்குழாய்கள் தகர்க்கப்பட்டதாக உள்ளூர்வாசிகள் கூறுகின்றனர்.

சதாம் ஹூசைனின் பிறந்த ஊரான ரிக்ரிட்டிற்கு அண்மையில் இச் சம்பவம் நடைபெற்றது.



இந்தியாவில் தொழிற்சாலையொன்றில் பணியாற்றும் குழந்தைத் தொழிலாளியான சிறுவனொருவன்.

## கம்போடியாவின் ஆர்ப்பாட்டத்தில் துப்பாக்கிச்சூடு!


கம்போடியாவின் - தலைநகர் பொனோம்பென்னில் ஆர்ப்பாட்டம் செய்த ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள் மீது, அந்நாட்டுப் படைகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் கொல்லப்பட்டதுடன், பதினைந்து பேர்வரை படுகாயமடைந்தனர்.

அடுத்த வாரம், பொனோம்பென்னில் - ஆசியான் அமைப்பின் வெளிவிவகார அமைச்சர்கள் கூட்டம் நடைபெறவிருக்கும் வேளையில் - இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

தமது முகாமையாளரை மாற்றுவதுடன் ஊதிய உயர்வையும் கோரி- ஆடைத் தொழிற்சாலையொன்றின் ஊழியர்கள் தலைநகரில் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தியிருந்தனர்.

# ஐ.நா. அமைதி காக்கும் படை மத்திய கிழக்கிற்கு வேண்டும்!

## கோபி அனான் அறிவிப்பு



(ரெல் அவிவ்)

மத்திய கிழக்கில் - பலஸ்தீனத்திலும், இஸ்ரேலிலும் வலுத்துள்ள கடும் சண்டைகளைத் தொடர்ந்து- அப்பகுதிகளுக்கு ஐ.நா. அமைதி காப்புப் படையினர் அனுப்பிவைக்கப்பட வேண்டுமென - ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனான் தெரிவித்துள்ளார்.

மேற்குக் கரையிலும், காஸாவிலும் தொடர்ந்து நடத்துவரும் சண்டைகள் பற்றி, செய்தியாளர்களிடம் பேசிய கோபி அனான் - அமெரிக்காவைச் சேர்ந்த கண்காணிப்பாளர்கள் 51 பேர் அடுத்த வாரமளவில் மத்திய கிழக்கிற்கு அனுப்பப்பட்டாலும், அவர்களால் மட்டும் அமைதியை ஏற்படுத்த முடியாதெனவும் -

ஆயுதம் தாங்கிய அமைதிப் படையினர் மாத்திரமே - தீவிரமாகி வரும் வன்செயல்களைக் கட்டுப் படுத்தக் கூடியவர்கள் எனவும் குறிப்பிட்டார்.




இதேவேளை -

இஸ்ரேலியர்கள் - ஹமாஸ் இயக்கத் தலைவர் அப்துல் அசீஸ் அல்-என்ரிசி மீது மேற்கொண்ட கொலை முயற்சியும், தொடர்ந்து நடைபெறும் தற்கொலைத் தாக்குதலும், ஏவுகணை மற்றும் ஹெலித் தாக்குதலும் - இஸ்ரேல், பலஸ்தீனப பகுதிகளில் தொடர்ந்தும் பதற்றத்தைத் தக்கவைத்தேயுள்ளன.

# முக்கிய போர்க் குற்றவாளி சேர்பியாவில் நேற்று கைது!



வெஸலின்

சேர்பிய நாட்டின் விசேட படைகள் - அந்நாட்டின் மிகமுக்கியமான போர்க் குற்றவாளியான, முன்னாள் யூகோஸ்லாவிய இராணுவக் கேணலான வெஸலின் ஸ்கேவன்கானினை நேற்றுக் கைதுசெய்திருக்கின்றனர்.

பெல்கிரேட்டிலுள்ள அவரது வீட்டைச் சுற்றிவளைத்த விசேட படையினர் - வெஸலினுடைய ஆதரவாளர்களுடன் கடுமையாக மோதிய பிறகே, அவரைக் கைதுசெய்ய முடிந்தது. இக்கலவரத்தில் - வாகனங்கள் அடித்து நொறுக்கப்பட்டு எரிக்கப்பட்டதுடன், விசேட படையினர் கண்ணீர்ப்புகைக் குண்டுத் தாக்குதலையும், தடியடிப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர்.


கிழக்கு குரோஷியாவில் - 1991 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 200 பொதுமக்களைப் படுகொலை செய்ததாக - வெஸலின் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது.

கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்னர் - யூகோஸ்லாவில், ஸ்லோபொடன் மிலோசெவிக்கின் கட்சி வீழ்ச்சியடைந்ததும் - வெஸலின் தலைமறைவானார்.

இதற்கு முன்னர் - விசேட படையினர் தன்னைக் கைதுசெய்ய முயன்றால், தன்னைத்தானே அழித்துக்கொள்வேன் என, வெஸலின் மிரட்டி வந்தார். ஆனால் - பின்னர், அவரது மனைவி - வெஸலின் சரணடையத் தயாராக இருப்பதாக அறிவித்ததையடுத்தே, இக்கைது இடம்பெற்றது.

முன்னாள் ஜனாதிபதி மிலோசெவிக்கும் போர்க் குற்றங்களுக்காக விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருவது தெரிந்ததே.

இதேவேளை - முன்னாள் பொஸ்னியன் - சேர்பிய ஜனாதிபதி ரடோவன் கராடிஸ் மற்றும் இராணுவத் தளபதி ரட்கோ மிலாடிக் ஆகியோர் - யூகோஸ்லாவியா பிரிந்தபோது, நடந்த போர்க் குற்றங்களுக்காக - இனி அடுத்தடுத்துக் கைதாவார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிகின்றது.



இந்தோனோஷியாவின் - அசே மாகாணத்தில் நடக்கும் சண்டை பற்றி அறிவதற்காக அங்கு சென்றிருக்கும் பத்திரிகையாளர் ஒருவர், தாகத்தை தணிக்க அருந்துவது - வேறொன்று மல்ல, பாம்பின் ரத்தமேதான்.

# சர்ச்சைக்குரிய அயோத்திப் பகுதியில் இராமர் ஆலயம் இருக்கவில்லை!

## தொல்பொருள் ஆராய்ச்சியில் கண்டுபிடிப்பு



அயோத்தியில் பாபர் மசூதி கட்டப்பட்ட இடத்தில், முன்னர் இராமர் ஆலயம் இருந்ததற்கான ஆதாரங்கள் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லையென - அப்பகுதியில் புதைபொருள் ஆராய்ச்சியை மேற்கொண்ட விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

பாபர் மசூதி கட்டப்பட்டிருந்த பகுதி, இராமர் பிறந்த இடம் எனக்கூறி, மசூதியை - இந்து மத அடிப்படைவாதிகள் தகர்த்ததால், அங்கு பெரும் கலவரம் உருவாகியதும் - இதுவரை தொடரும் இப்பிரச்சினையில் ஆயிரக்கணக்கானோர் பலியாகியதும் குறிப்பிடத்தக்கது.

இப்பிரச்சினையில், சுயாதீனமான புதைபொருள் ஆராய்ச்சிக்கு உத்தரவிடப்பட்டு - அங்கு புதைபொருள் ஆய்வாளர்கள் பலர் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தனர்.

மூன்றுமாத காலமாக நீடித்த ஆராய்ச்சியின்படி - இங்கு இராமர் ஆலயம் எதுவும் முன்னர் இருந்ததற்கான ஆதாரங்கள் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை எனத் தெரியவந்துள்ளது.

இதனை - இந்திய அரசின் தொல்பொருள் ஆராய்ச்சித்துறையும் உறுதிப்படுத்தியிருக்கிறது.

# லைபீரியாவில் 400 பேர் இரு தினங்களில் பலி!

## தலைநகரருகே கடும் சமர்

லைபீரியாவில் அரசாங்கப் படைகளுக்கும், போராளிகளுக்கும் இடையே நடைபெற்றுவரும் கடும் சண்டையில், அண்மைய தினங்களில் மட்டும் 400 பேர் பலியாகியிருக்கின்றனர்.

தலைநகர் மொன்ரோவியா வ்ரை முன்னேறியிருக்கும் போராளிகள் - தமது தாக்குதலைகளை, தொடர்ந்து தீவிரப்படுத்தி வருகின்றனர்.

லைபீரியாவின் மூன்றிலிரண்டு பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் போராளிகள் - தலைநகரைத் தமது பிடிக்குள் கொண்டுவருவதற்கான இறுதிக்கட்டத் தாக்குதல்களில் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை - ஜனாதிபதி சார்ள்ஸ் ரெய்லர் இன்னமும் தலை நகரிலேயே இருப்பதாகவும் - போராளிகளுடன் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடுமாறு, மேற்காபிரிக்கத் தலைவர்கள் விடுத்த கோரிக்கையை அவர் நிராகரித்துவிட்டதாகவும் தெரியவருகிறது.

இது இப்படியிருக்க - ஸியரா லியோனில் கூடிய விசேட நீதிமன்றம்- ஜனாதிபதி ரெய்லர், போர்க்குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட வேண்டியவர் என்ற அறிவிப்பை விடுத்தபோதும், அதனை ஜனாதிபதி ரெய்லர் ஏற்றுக் கொள்ளவில்லையெனவும் தெரியவருகிறது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கொழும்புக்கு கடலுணவுப் பொருட்கள்; அனுப்புவதற்கு சமாசம் நடவடிக்கை!

யாழ்ப்பாணத்திலிருந்து கடல் உணவுப் பொருட்களை விற்பனைக்காக கொழும்புக்கு அனுப்பிவைப்பதற்கு, கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

குடாநாட்டில் பிடிக்கப்படும் கடல் உணவுப் பொருட்களான - கடலட்டை, சிங்க இறால், நண்டு, கணவாய் போன்றவற்றை ஏ-9 வீதியூடாக கொண்டு செல்வதற்குப் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துவதற்காகவும், வேறு பல விடயங்கள் சம்பந்தமாகவும், சமாசத் தலைவர் தவரட்ணம் அண்மையில் கடற்புலிகளின் சிறப்பு தளபதி கேணல் சூசையைச் சந்தித்துப் பேசியிருந்தார். இந்தச் சந்திப்பில் மேற்படி உணவுப் பொருட்களை விற்பனைக்கு எடுத்துச் செல்வதற்கு, கடற்புலிகள் அனுமதி கொடுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - மாலை 5.30 மணிக்கு முன்னர் ஏ-9 பாதையூடாக கடலுணவுகளை ஏற்றிக்கொண்டு லொறிகள் செல்வதிலுள்ள சிரமங்களை நிவர்த்தி செய்துதரும்படியும், தமது லொறிகள் செல்வதற்கான பாதை நேரத்தை அதிகரித்துத் தருமாறும் - இராணுவத்தினரையும், விடுதலைப் புலிகளையும் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கோரியிருக்கின்றது.

கடலுணவுகளை எடுத்துச் செல்ல - குளிரூட்டப்பட்ட வாகனங்கள் மூன்றைச் சொந்தமாக கொள்வனவு செய்வதற்கும், சமாசம் நடவடிக்கை எடுத்துள்ளது.

யாழ். குடாநாட்டில் பிடிக்கப்படும் கடலுணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்வதன் மூலம், மீனவர்கள் அதிகளவிலான வருவாயைப் பெறும் வாய்ப்பு ஏற்படுமெனவும், அவர்களது தொழில் முயற்சிகள் முன்னேற்றமடையும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (ரா)

# கண்காணிப்புக் குழு அலுவலகம் மின்னல் தாக்குதலுக்குள்ளானது

(கொழும்பு)

கொழும்பில் உள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அலுவலகம் மீது, மின்னல் தாக்கியதில் அங்கிருந்த உபகரணங்கள் செயலிழந்தன. இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு இடம்பெற்றது.

இலக்கம் - 399, காலி வீதி, கொள்ளுப்பிட்டியில் உள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைமை அலுவலகம் மீதே மின்னல் தாக்கியது.

இதனால், அலுவலகத்திலிருந்த- தொலைபேசி, கணிணிகள் என்பன செயலிழந்ததால், அலுவலகப் பணிகள் முற்றாகச் செயலிழந்தன. மறுநாள் காலை 11 மணிக்கே அலுவலகம் மீண்டும் படிப்படியாக இயங்க ஆரம்பித்தது எனத் தெரியவருகிறது.

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில், 'சமாதான நடவடிக்கைகளில் பெண்களை ஈடுபடுத்தல்' என்ற தொனிப்பொருளிலான கருத்தரங்கு - இன்றும், நாளையும், நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் - மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார்.

# திருக்கேதீஸ்வரம் கும்பாபிஷேகம் அடுத்த மாதம் ஆறாம் திகதி!

ஈழத்தில் பாடல் பெற்ற சிவத்தலமான திருக்கேதீஸ்வரர் ஆலய மகா கும்பாபிஷேகம், அடுத்த மாதம் ஆறாம் திகதி காலை 9 மணிக்கும் 10 மணிக்கும் இடையில் நடைபெறவுள்ளது.

இதற்கான பூர்வாங்க கிரியைகள் அடுத்த மாதம் 2 ஆம் திகதி காலை 6 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகும். 4 ஆம் திகதி பக்தர்களின் எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம்பெறும்.

# துறைமுகத்தை விடியோ எடுத்து கைதான இருவர் விடுவிப்பு!

கொழும்பு துறைமுகப் பகுதியை விடியோ படம்பிடித்ததாக குற்றஞ் சுமத்தப்பட்டு - பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்ட இரண்டு இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மேற்படி இருவரும், வத்தளையில் உள்ள தேவாலயம் ஒன்றில் தங்கியிருந்துள்ளனர்.

கடந்தவாரம் கொழும்புத் துறைமுகப் பகுதியை விடியோப் படம் எடுத்துக்கொண்டிருந்த சமயம், பொலிஸாரால் இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

பொலிஸாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டபோது, தாம் துறைமுக அழகையே படம்பிடித்ததாக இந்த இளைஞர்கள் தெரிவித்தனர்.

விடியோப் படத்தை ஆராய்ந்து, இது உண்மையென அறிந்த பொலிஸார் அவர்களை விடுவித்தனர்.

# போர்நிறுத்த மீறல்களை...

அப்போது அவர் தெரிவித்ததாவது-

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகள் நேற்றைய சந்திப்பின்போது, அரசாங்கத் தரப்பின் நிலைப்பாடுகளையும், அரசாங்கத் தரப்பினுடைய வேண்டுதல்களையும் எமக்கு எடுத்துரைத்தனர்.

நாம் எமது தரப்பிலிருந்து முக்கியமான விடயங்களை எடுத்துக் கூறினோம்.

அரசாங்கம் மற்றும் விடுதலைப் புலிகள் தரப்புக்களில் - கைது செய்யப்படுபவர்களை, இரண்டு தரப்பும் தடுத்து வைக்கும் நடைமுறையைத் தவிர்த்து, யுத்த நிறுத்த மீறலில் ஈடுபடும் இருதரப்பினரையும் கையாளுகின்ற பொறுப்பைக் கண்காணிப்புக்குழு ஏற்பதுதான் சரியான நடைமுறை. இதுதான் எதிர்காலத்தில் ஏற்படுகின்ற நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்குரிய நிலைமையை உருவாக்கும் என்பதை நாங்கள் தெளிவுபடுத்தினோம்.

இரண்டு தரப்பும் தொடர்ச்சியாக மாறிமாறி ஒருவரையொருவர் கைது செய்து கொண்டிருப்பது, நெருக்கடி நிலையைத் தீவிரப்படுத்தவே செய்யும்.

எனவே, யுத்த நிறுத்த நடைமுறைகளில், மீறப்படுகின்ற விடயங்கள் சம்பந்தமாக - அவற்றைக் கண்காணிப்புக் குழுவே பொறுப்பேற்று, தீர்ப்பை வழங்குகின்ற நடைமுறையைக் கொண்டுவரவேண்டும் எனவும் தெளிவுபடுத்தியுள்ளோம்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில், நடைபெறும் - கொலைகள், கொள்ளைகள் சம்பந்தமாகவும் நாம் சுட்டிக்காட்டியுள்ளோம். அப்பகுதிகளில் சட்டம் ஒழுங்கைப் பேணுவதிலுள்ள பலவீனங்களை நாங்கள் எடுத்துக்காட்டினோம்.

அடுத்ததாக, கடற்பகுதிகளில் நடமாட்டம் சம்பந்தமாகவும், ஒழுங்குமுறைகள் சம்பந்தமாகவும் பேசப்பட்டது.

கடற்பகுதி நடமாட்டம் சம்பந்தமாகவும், எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள கடற்பகுதிகளில் - எங்களுடைய போக்குவரத்துக்களும், எங்களுடைய பயிற்சி நடவடிக்கைகளும் தொடரும் என்றும் - இவற்றைத் தடுப்பது, பரிசோதிப்பது மற்றும் அச்சுறுத்தல்களை ஏற்படுத்துகின்ற ஏனைய நடவடிக்கைகளைக் கடற்படையினர் தவிர்க்க வேண்டும் என்பதையும், நாங்கள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் வலியுறுத்தியுள்ளோம்.

இவ்வாறான விடயங்கள், மோதல் நிலையை ஏற்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகளை ஏற்படுத்திவிடும் என்ற நிலைப்பாட்டையும் தெளிவுபடுத்தியுள்ளோம்.

எதிர்காலத்தில் கண்காணிப்புக் குழுவினுடைய செயற்பாடுகளை அதிகரிக்கும் முகமாக - செயற்படுத்த வேண்டிய சில ஆலோசனைகளையும் - அரச தரப்பு, கண்காணிப்புக் குழுவிற்குத் தெரிவித்துள்ளது. இதேபோல் நாங்களும், சில நடைமுறை ஒழுங்குகள் சம்பந்தமாக, எமது நிலைப்பாட்டை அவர்களுக்கு எடுத்துக்கூறியிருக்கிறோம் என்றார் தமிழ்ச்செல்வன்.

தொடர்ந்து செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த அவர்-

ரோக்கியோ மாநாடு நடந்து முடிந்துள்ளது. இம்மாநாடு தொடர்பாக, அரசாங்கம் ஏதாவது கடிதங்களையோ, தகவல்களையோ அனுப்பியுள்ளதா எனக் கேட்டபோது, இதுவரை இல்லை எனப் பதிலளித்தார்.

ரோக்கியோ மாநாட்டின் பின்னர், சமாதானச் சூழ்நிலை தொடர்பாக மக்களிடம் பல சந்தேகங்கள் தோன்றியுள்ளன. இது தொடர்பாக, உங்களின் கருத்து என்ன? என்று செய்தியாளர் ஒருவர் கேட்டபோது, பதிலளித்த தமிழ்ச்செல்வன்-

இவ்விடயம் தொடர்பாக, நாம் ஏற்கனவே எமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி விட்டோம். ரோக்கியோ மாநாட்டிற்குப் பின்னர், எப்படியான நடவடிக்கைகளை அரசாங்கம் பேணவேண்டும் என்பது சம்பந்தமாக, எமது தலைமைப்பீடம் வெளியிட்ட உத்தியோகபூர்வ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வடக்கு - கிழக்கிற்கான நிர்வாக அதிகாரம் கொண்ட ஓர் இடைக்கால நிர்வாகத்தைச் செயற்படுத்துவதுதான் - சர்வதேச உதவிகளையும், எதிர்காலத்தில் ஏற்படுத்தக்கூடிய சமாதான முன்னெடுப்புகளையும் சாத்தியமானதாக்கும் என்பதையும் நாம் ஏற்கனவே வலியுறுத்தியுள்ளோம்.

ஏற்கனவே, அரசாங்கத்தால் பரிந்துரைக்கப்பட்ட சபை, வடக்கு-கிழக்கை நிர்வகிக்கக்கூடிய அதிகாரமற்ற ஒன்றாகவே எங்களால் கருதப்படுகிறது.

ரோக்கியோவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது நிலைப்பாட்டையே வெளிப்படுத்தினார் தவிர- தமிழ் மக்களும், தமிழீழ விடுதலைப் புலிகளும் எதிர்பார்க்கின்ற நிர்வாக அதிகாரம் கொண்ட - இடைக்கால நிர்வாக அலகைப் பற்றி அவர் அங்கு தெளிவுபடுத்தவில்லை எனக் குறிப்பிட்டார் தமிழ்ச்செல்வன்.

# நாவற்குழி வீடமைப்பு திட்டம்; வீடுகள் விற்பனையாகின்றன!

நாவற்குழி வீடமைப்புத் திட்டத்தில் உள்ள வீடுகள், லொத்தர் முறை மூலம் விற்பனை செய்யப்படவிருக்கின்றன.

ஏற்கனவே, பல வீடுகள் விற்பனை செய்யப்பட்டுவிட்டன. மிகுதியாகவுள்ள - சில வீடுகள் சுவர்களுடனும், வளைமரங்களுடனும் உள்ளன. இவ்வாறான வீடுகளே, லொத்தர் முறை மூலம் - விண்ணப்பதாரிகளுக்கு விற்பனை செய்யப்படவிருக்கின்றன.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில், வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை அலுவலகத்தில் - லொத்தர் முறை மூலம் இதற்கான தெரிவு நடைபெறவிருக்கிறது. விண்ணப்பதாரிகளை குறிப்பிட்ட நேரத்திற்கு, மேற்படி அலுவலகத்திற்கு சமூகம்தரும்படி வீடமைப்பு அதிகாரசபை கேட்டுக்கொண்டுள்ளது.

## மேற்கு நாடுகளின்...

ஜன ஐக்கிய முன்னணி வட்டாரங்கள் தெரிவித்ததாக - அவுஸ்திரேலிய வானொலியின் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

## இந்திய வெளியுறவு...

ரோக்கியோ மாநாடு குறித்தும், தற்போதைய அரசியல் விவகாரங்கள் குறித்தும்- இருதரப்பும் கருத்துப் பரிமாறிக் கொண்டதாகத் தெரியவருகிறது. எனினும், இச்சந்திப்புக் குறித்து அமைச்சர் பீரிஸ் எதுவித கருத்தும் கூற மறுத்துவிட்டார்.

## வீதி விபத்தில் இரு பொலிஸார் படுகாயம்

பொலிஸார் பயணம் செய்த மோட்டார் சைக்கிள், தனியார் பஸ் ஒன்றுடன் மோதியதில், இரு பொலிஸார் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மதியம் இரண்டு மணியளவில், மானிப்பாயில் இடம்பெற்ற இவ்விபத்தில் - சப் இன்ஸ்பெக்ரர் தம்மிக்க பெரேரா, பொலிஸ் கான்ஸ்டபிளான சொய்சா ஆகிய இருவருமே படுகாயமடைந்தனர்.

மானிப்பாய் பொலிஸார், பஸ் வண்டியை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர். பொலிஸாரின் மோட்டார் சைக்கிள் மிகமோசமாகச் சேதமடைந்துள்ளது.

மங்களகரமான புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சுபானு வருடம், வைகாசித் திங்கள் 31 ஆம் நாள் 14.06.2003 சனிக்கிழமை இன்று காலை 7.20 மணியளவில் வரும் சுபமுகூர்த்த வேளையில், இல.336, 338 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ரேடர்ஸ்

என்னும் மொத்த, சில்லறை வியாபார ஸ்தாபனத்தை மதிப்புக்குரிய கௌரவ, மாண்புமிகு இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் அவர்கள் திறந்துவைக்கவுள்ளார் என்பதை எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். அத்தருணம் அனைவரும் சமூகமளித்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

☆ சில்லறை வாடிக்கையாளர்களின் நலன்கருதி - புதுப்பொலிவுடனும், நவீன வசதிகளுடனும், நல்ல தரமான, நல்ல ரகமான பொருட்களை விரும்பிய அளவுகளில் பொதிசெய்யப்பட்ட பக்கட்டுகளில் மிகக் குறைந்த விலையில் விரைவாகப் பெற்றுக்கொள்ள ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நல்ல பொருட்களுக்கு இது ஒரு நம்பிக்கையான ஸ்தாபனம்

336, 338, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P. 222 3328 (சி/1084)

இங்ஙனம்
உரிமையாளரும், ஊழியர்களும்.

இந்திய சாஸ்திரியார் வருகை

முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணியபூமிக்கு வருகை தந்துள்ளார். பரம்பரை ஜோதிடர்

புகழ்பெற்ற S.N.குமாரசாமி அவர்கள்

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, தொழில் முன்னேற்றமின்மை, கல்வித் தடையா?, குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.

(காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை)

ஸ்ரான்லி லொட்ஜ்

இல.711, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P-077 6080660 (யாழ்.இந்துக்கல்லூரிக்கு அண்மையில்)

(சி-1088)

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.98 | 97.40 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 161.52 | 162.93 |
| 1 யூரோ | 113.56 | 114.88 |
| 1 சுவிஸ் பிராங் | 73.70 | 74.92 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 63.95 | 65.08 |
| 1 ஜப்பானிய யென் | 00.82 | 00.83 |
| 1 சவூதி றியால் | 25.94 | 25.94 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 14.06.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.